உ

ஜோதிமயம்.

ரஞ்சித போதினி

கதை, காவ்யம், சரித்திரம், நவீனம், புராணம், இதிகாசம்,
அனுபவ முதலிய விஷயங்களைப் புனைந்துகொண்டு
வெளிவரும் ஓர் மாதந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

"உலகத்தோ டொட்ட ஒழுகல், பலகற்றும்
கல்லா ரறிவி லார்." (தமிழ்மறை)

ஆசிரியர் :—தமிழ்ப்பூஷணம் ஸ்ரீ வாசுதேவ ராவ் கேய்க்வார்.

தொகுதி 2	இரக்தாக்ஷி௵ புரட்டாசி௴ 1924௵ செப்டம்பர்௴	பகுதி 8

கடவுள் வணக்கம்.

இமய மலைதனிற் பிறந்த நற்றாய் வாழ்த்த
எழிற்சடையிற் குடியிருந்த பெருந்தாய் வாழ்த்தக்
கமலமலர் மாமியுளங் களித்து வாழ்த்தக்
கலைவாணித் தங்கை புயம்புகழ்ந்து வாழ்த்த
அமரர்புகழ் சசிமுதலா மரம்பை மாதர்
ஆலத்தி யெடுத்தேத்த வருகி னின்று
சமைவுறு நற்றேவி மாரிருவர் போற்றச்
சமரபுரி நாயகரே யாடீ ரூசல்.

மெய்வேடம் பூண்டவர்க் குள்ளும் புறனும் விளங்கும்பிரான்
பொய்வேடம் பூண்டன னென்றாலுங் காத்தனை பூங்கணையா
லெய்வேட னல்வருந்தா தெனையா ளினியேய்ந்த தினை
கொய்வேட மானைமணந் தோய்தேன் போரிக்குணக் கொண்டலே.

ரஞ்சித போதினி

ஓர் மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

உருத்ரோத்காரிஸு புரட்டாசிமீ 1924ஸு செப்டம்பர்மீ

ஸ்வயராஜ்யத்தின் சூக்ஷமம்

II

சுயராஜ்யம் கிடைக்குமா ?

ஸ்வயராஜ்யம் ! ஸ்வயராஜ்யம்!! என்னும் பேரொலி ஆகாயத்தைப் பிளந்துகொண்டு வானுலகிலும் ஊடுருவிச்செல்கின்றதென்பதை நாம் கூறவே வேண்டாமெனினும், ஸ்வயராஜ்யம் என்பதன் பொருள்தா னென்னை யென்பதும், ஸ்வயராஜ்யம் வேண்டுமென்று கூறும் தலைவர்களின் நோக்கம்தான் என்னை யென்பதும், நமக்கு ஒன்றும் விளங்கவில்லையெனினும், தலைவர்களின் அபிப்பிராயம் பேதமுடையதாகவே காணப்படுவதோடு, நாமே நமது நாட்டையாள வேண்டுமென்று ஒரு சாரரும், ஆங்கில அரசாக்ஷிக்குட்பட்ட ஸ்வய ஆட்சிவேண்டுமென்று ஒரு சாராரும் கூறுகின்றனர். ஆனல் அது ஸ்வய ஆட்சியாகாதென்றும் சட்டம் பொதுவாக விருக்கவேண்டுமென்று மற்றொரு சாராரும் கூறுகின்றனர்.

இதுதான ஸ்வயராஜ்யம்? ஸ்வயராச்சிய மென்பதென்ன ? என்பதற்குத்தான் நமக்கு வியாக்கியானம் வேண்டும். ஸ்வயராஜ்யம் என்பதற்கு சுதந்தரம் என்றுதான் கூறவேண்டும். ஸ்வதந்தரம் என்பது எந்தக்காரியத்தையும் ஸ்வயமாகவே செய்ய வேண்டுமென்பதே. ஸ்வயமாக ஒரு விஷயததைச் செய்து முடிக்க ஒருவனுக்கு வேண்டியதென்ன ? அப்படி செய்தால் ஸ்வயராஜ்யம் கிடைக்குமா ? என்னும் இவைகளுக்கே முக்கியமாய் நாம் தாத்பரியம் கூறவிரும்புகிறோம்.

ஸ்வயராஜ்பம் என்னும் ஸ்வதந்திரம் வேண்டுமென்பவர்க்கு முக்கியமாய் வேண்டுவதும் முதலில் அநுஷ்டிக்க வேண்டுவதும் வைராக்கியம். வைராக்கிய மென்பது துவேஷமல்ல. மனோதைரியம்.

மனோதைரியமானது சாதாரணமாய் ஏற்படக் கூடியதன்று. அதற்கு அதிகமான சாதகம் வேண்டும் அந்த சாதகம் எப்படி ஏற்படுமென்பதைக் கூறப்புகுமிடத்து, நமது தேச சம்பந்தமான வீரர்களின் சரித்திரங்களை வாசித்தலினுலும், பூர்வீக மன்னர்களின்

வீரதீர பராக்கிரமச்செயல்களைப் படனம் செய்வதினாலுமே ஏற்படும். இதற்காக நம்மவர்கள் தம்மக்களுக்கு முதன்முதலாக நமது நாட்டுக் கல்வியை போதிக்கவேண்டும். நமது நாட்டுக் கல்வியானது பூரண மாகப் போதிக்கப்பட வேண்டும். நமது நாட்டுக் கல்வியினாலே முன்னோர் வழியை பின்பற்றிச் சிறுவர்களுக்கு இடையிடையே தேகப்பியாசத்தைப் போதிக்கவேண்டும்.

முக்கியமாக நாம் நமக்கு வேண்டியதான ஸ்வதந்திரத்தை யடைவதற்காக கவனிக்கவேண்டிய விஷயங்களாவன :—

(அ) நமக்கு ஸ்வதந்தரம் வேண்டுமாயின் நமது மக்களை தேசியக்கல்வி முறையில் பழக்கவேண்டும்,

(ஆ) நமக்கு ஸ்வதந்தரம் வேண்டுமாயின் நமது நாட்டுத் கைத் தொழில்களைச் சீர்பெற நடைபெறும்படி செய்யவேண்டும்.

(இ) நமக்கு ஸ்வதந்தரம் வேண்டுமாயின் நமது வ்ழக்குகள் நீதி ஸ்தலங்களுக்குப் போகும்படி செய்யக்கூடாது.

(ஈ) நமக்கு ஸ்வதந்தரம் வேண்டுமாயிள் நம் நாட்டவாகளுடன் ஒற்றுமையாயிருக்க வேண்டும்.

(உ) நமக்கு ஸ்வதந்தரம் வேண்டுமாயின் நமது நாட்டு வஸ்துக்களை வாங்கவேண்டும். அதோடு அன்னிய வஸ்து பஹிஷ்காரம் செய்ப்வேண்டியது.

(ஊ) நமக்கு ஸ்வதந்தரம் வேண்டுமாயின் நமது நாட்டு ஸ்திரீகளுக்கு பூர்வகாலத்து வீர மங்கையர்களின் சரித்திரங்களைப் போதிக்கவேண்டும்.

(எ) நமக்கு ஸ்வதந்தரம் வேண்டுமாயின் நம்மவர்கள் தாழ்ந்த வகுப்பார்களை புறக்கணிக்காமல் ஆதரணை செய்யவேண்டியது.

(ஏ) நமக்கு ஸ்வதந்தரம் வேண்டுமாயின் நம்மவர்கள் விவசாயத் தொழிலைக் கைக்கொள்ளவேண்டும்.

(ஐ) நமக்கு ஸ்வதந்தரம் வேண்டுமாயின் காபி, தேயிலை, மது பானங்களை யொழிக்கவேண்டும்.

(ஒ) நமக்கு ஸ்வதந்தரம் வேண்டுமாயின் நாம் நாடகம், ஸினிமா முதலியவைகளைப் பார்ப்பதை யொழிக்கவேண்டும்.

(ஓ) நமக்கு ஸ்வதந்தரம் வேண்டுமாயின் நம் நாட்டுப் பிச்சைக்காரர்களை நல்வழிப்படுத்தவேண்டும். (இதனால் சோம்பலென்பது ஒழியும்).

(ஔ) நமக்கு ஸ்வதந்தரம் வேண்டுமாயின் வைராக்கிய சித்தம் வேண்டும்.

மேற்கண்ட விஷயங்களை நாம் அநுசரிக்கவேணடிய முறைகளைக் கீழே விளக்குதும்.

தேசீயக் கல்விமுறை.

தற்காலம் போதிக்கப்படும் கல்வியைப்போ லல்லாமல் முற்காலத்திய முறையாகிய (தமிழ் முறையைமட்டும் கூறுதும்.) அரிச்சுவடி, வருக்கபாடம், ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், வேற்றி வேற்கை, வாக்குண்டாம், நல்வழி, பழமொழி, நீதிநெறிவிளக்கம், திருப்புகழ், திவாகரம், நிகண்டு, அந்தாதி மாலை, சதகம், நன்னூல், புராணம், இதிகாசம் முதலியவற்றை முறையே வாசித்துவரப் பழக்க வேண்டும். இம்முறையினால் அரியபெரிய விஷயங்கள் மனதிற்பதிந்து உலகம் இன்னதென்றும், இதனையுற்பத்தி செய்தவர் இன்னவித மானவரென்றும், அவரே இதைப் புரப்பதற்காகவேண்டி மூவுருவெய்தினரென்றும், தம் சிருஷ்டியில் உயர்பிறப்பாளராகிய மானிடர்கள் தாம் ஒருவரென்பதையும், தம்மையறியவேண்டி சுய அறிவையும், சொல்லறிவையும், உண்டாக்கினரென்றும், அஃது மானிடர்பால் முக்குணங்களாக (ரஜஸ், தமஸ், ஸத்துவம்) விளங்குகின்றதென்றும், இம்முக்குணங்களின் தாரதம்மியங்களை விளக்குவது கருதி வேதம் நான்காகவகுக்கப்பட்டதென்றும், நான்குவேதத்தின் பாகுபாட்டை விளக்கத் தகுந்ததான விஷயமாகவே பஞ்சபூத பரிணாம மாகின்றதென்றும், பஞ்சபூத மரிணாமத்தின் தன்மையதான விளக்கமே ஆறு அறிவாகிய சாஸ்திரங்களாகிப் பொலிகின்றதென்றும் ஸப்தம், ஸ்பரிஸம், ரூபம், ரசம், கந்தம், நாமம், பேதம் என ஏழுவகையாக்கி, அஷ்டவித லக்ஷணங்களுடன் நவகண்டமெனப் பொலிந்து நிற்கும் உலகம் என்னும் துணிபும், உலகில் நடைபெறும் சகல விஷயங்களையும் இன்னின்ன விதமாகத்தான் செய்யவேண்டுமென்றும், மானுஷ்ய ஜன்மத்தையடைந்த ஒவ்வொருவனும், உலகில் உத்தமனென்னும் ஒப்புயர்வற்ற பெயரை யடைய வேண்டுமானால் கல்வி கேள்வி, புஜபலம், சௌரியம் முதலியவைகளுடன் உதார குணமு மிருக்கவேண்டு மென்பதையும் அறிய ஏதுவாகும். இதோடுகூட நாம் தற்சுதந்தர முடையவர்க ளென்பதும், அடிமைத்தனத்தைக் கைக்கொள்ளக் கூடாதென்றும் அறிந்து ஒழுகுவான். இந்த அடிமைத்தனத்தையொழிப்பதையும் சுயேச்சையடைவதையும் ஏழு வயதிலேயே படித்துக்கொள்ளுகின்றனர். சிலர் இதை யாக்ஷேபிக்கலாம். ஆனால் நாம் அதை மறுப்போம். ஏனெனில் 'இளமையிற் கல்வி சிலைமே லெழுத்து' என்னும் ஆன்றோர் வாக்கியப்படி ஏழு வயதில் வாசிக்கும் 'தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது' என்னும் மொழி நல்ல வாலிப வயதாகிய இலக்கிய பாட காலத்தில் பிரதிபிம்பித்து அடிமைத்தனத்தையகற்றி சுயேச்சையையும் கௌரவத்தை அடையும் முறையைக் கைக்கொள்ளலாகும். அஃதின்றி தேசியக்கல்வி கற்பதையொழித்து வேறுமுறையானதான அடிமைத்தனக் கல்வியைக் கற்க நேரிடுமாயின் 'உழுதூண் சுவையின் தொழுதூண் இனிது' என்றுதான்பொருள்படும். அதனால் தாமும் அடிமை

யாகித் தமது சந்ததியாரும் அடிமையாகி அழிவுறவே வேண்டிவரும். இதனால் பூதவுடம்பு பெற்றவர்கள் புகழுடம்பு எய்தவே யெய்தார். ஆனால் இவ்விஷயத்தைச் சிலர் ஆக்ஷேபிக்கலாம். எங்ஙனமெனின், தமிழ் வாசித்தவர்களில் யார் எவரை அலக்ஷியம் செய்தனர். ஒவ்வொருவர் ஒவ்வொருவரை யண்டியே பிழைத்தனர் என்று கூறுவர். அது தவறு. அக்காலத்தில் அநேக தமிழர் அரசரையும்கூட லக்ஷியம் செய்பவில்லை யென்று கூறலாம். உதாரணமாக சோழமன்னன் மமதை கொண்டு உலகமே நமக்குள் ஐக்கியப்பட்டுக்கிடக்கின்றதென்று கூறிய சமயம், அருகிருந்த கம்பர் 'ஆம், உலகம் உமக்குள் ஐக்கியப்பட்டிருப்பினும் நீர் நமக்குள் ஐக்கிடப்பட்டவர்' என்று மறுத்ததும், அவன் 'நாட்டை விட்டுப்போய்விடும்' என்று கூறியசமயத்து 'மன்னவனும் நீயோ வளநாடும் உன்னதோ, உன்னை யறிந்தோ தமிழை யோதினேம், மற்றுமுள்ளதான நாடுகளைக் கடல் கொள்ளை கொண்டதோ, குரங்கைத் தாங்காத கொம்பில்லையதுபோல் என்னை விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்தன் இல்லாமலில்லை' என்று அவமதித்துக் கூறினனென்றால், இதனினும் தமிழ்க்கற்றவனின் வீரத்தை என்னென்று கூறுவது? தேசிய பாஷையில் ஒருவனுக்கு ஏற்படும் குணங்களைக்காட்டிலும் அந்நியபாஷையில் ஏற்படுமென்று கூறுவது பொருத்தமற்றதேயாகும். காலதேச வர்த்தமானங்களை யனுசரித்து தன் சுயபாஷையையும் அதன்மாட்டு விசேஷவன்மையும் ஒருவருக்குப்பொருந்துவது சாலச்சிறப்புடைத்தாகில் அந்நியபாஷையில் ஏற்படும் பற்றுதல் வேசியின்பால் ஏற்படும் பற்றுதலுக்குச் சமானமானது. தமிழ் நாட்டவன் தனக்கு அந்நியமானதான ஒரு விஷயத்தில் தலையிட்டால் அது அவனுக்கு மிகுந்த துன்பத்தை முதலில் தரவில்லையாயினும் பின்னொரு காலத்து தருமென்பதில் ஐயமேயில்லை. இதை நாம் விவரித்துக் கூறவேண்டியதில்லை யெனினும், தற்காலத்து விஷயங்களைச் சிறிது புலப்படக் கூறுவாம். அதாவது ஒருகாலத்தில் தாய்மொழியைப் புறக்கணித்து ஆங்கிலமொழியைக் கற்று வல்லுனராதல் வேண்டும். அங்ஙன மில்லையேல் அவற்கு மதிப்புமில்லை. இதோடேயா போயிற்று. உயர்தர உத்தியோகம் பெற்றிருப்பவனுக்கு மிகுந்த கௌரவம் ஏற்பட்டிருந்தது. அதிலும் உத்தியோகஸ்தனுக்கு மரியாதையும் விசேஷமாய் இருந்தது. அந்தகௌரவம் தற்காலம் மாறிப்போயிற்றென்று நாம் கூறவும் வேண்டுமோ? ஆங்கிலக்கல்வி நாகரீகத்தைக்கெடுத்து நூதனமுறையைக் கற்பித்து அடிமைத்தனத்தி லாழ்த்திவிட்டதென்று கதறவும் செய்கின்றனர். நமக்கு ஸ்வயராஜ்யம் வேண்டுமென்றால் நாம் அநுஷ்டிக்கவேண்டிய முறையாவது: ஸ்வதந்திரத்தின் அடிப்படையாவதும், சுயேச்சையை யளிப்பதும் சுதேசக் கல்வியே யன்றோ? சுதேசக் கல்வியினால் நம் மக்களுக்கு ஏற்படும் நன்மைகளைக் கணக்கிட்டுக் கூறமிடத்து அவை கணக்கி லடங்காதனவென்றே கூறவேண்டும். கணக்கிலடங்காதனவெனினும், ஒருவாறு சுருக்கிக் கூறுதும். அவையாவன:—

(அ) சுயபாஷாபிவிருத்தியினால்—சப்தோச்சாடனம் பெருகுகின்றது.
(ஆ) ஷை ஆசாரம் பெருகுகின்றது.
(இ) ஷை பகவத் பக்தி பாலியத்திலேயே மனதிற் பதிகின்றது.
(ஈ) ஷை தாய், தந்தை, குரு, தெய்வம் இவர்களின் வரன்முறையும் மதப்பற்றும் உண்டாகிறது.
(உ) ஷை நிதானமதியும் பகுத்தறிவும் உண்டாகின்றது.
(ஊ) ஷை பூர்வீக வீரர்களைப்போல தாமும் வீர பராக்கிரம சௌரியத்துடன் வாழ வேண்டுமென்னும் எண்ணமும் உதித்து அவ்வழி நடக்கச் செய்கின்றது.
(எ) ஷை ஜீவகாருண்யமும் பரோபகார மதியும் உதிக்கின்றது.
(ஏ) ஷை முக்கியமாய் தாய்நாட்டு அபிமானம் வேரூன்றுகிறது.
(ஐ) ஷை பிறர்பால் அன்பும் பக்தியும் ஏற்படுகின்றது.
(ஒ) ஷை குடும்பத்தை நடத்தும் முறையும் குலத்தைப் பற்றிய அபிமானமும் உண்டாகின்றது.
(ஓ) ஷை மனைவிபால் நடந்துகொள்ளும் முறையும், மக்களைப் பெறும் நெறியும், மகிழ்ச்சியுனிடருக்கும் வழியும் தெரியும்.
(ஔ) ஷை தியாகமதியும் தெய்வபக்தியும் ஏற்படுகின்றது.
(ஃ) ஷை ஆபத்காலத்தில் தன்னைக் காத்துக்கொள்ளும் சக்தியும் ஏற்படுகின்றது.
(க்) ஷை விவாதங்கள் ஏற்படும் காலங்களில் அதை நிவர்த்திக்கும் முறையும், நிவர்த்தித்துக்கொள்ளும் முறையும் ஏற்படும்.
(ங்) ஷை சந்தர்ப்பம் ஏற்பட்ட சமயத்தில் உயிரையும் திரணமாக மதிக்கும் அற்புத சக்திஏற்படும்.
(ச்) ஷை ரஜஸ், சத்வம், தாமோ குணங்களின் தாரதம்மியமும், இம்மூன்றிலும் சிறந்த தான ஸத்வகுணத்தைக் கைக்கொண்டு நடந்து கொள்ளவேண்டிய நெறியும் தெளிவாய் விளங்கும்.

(ஞ்) சுயபாஷாபிவிருத்தியினுல்—ஆத்மா ஆறுதலடையத் தக்கதான மோக்ஷமென்பது இன்னதன்மைய தென்றும் இவ்விதமாய் அநுஷ்டித்துதான் மேன்மை யெய்த வேண்டுமென்று அறியும் தன்மையும் ஏற்படுகின்றது.

(ட்) மேற்படி உலகம் இன்னதன்மையதென்றும், உலகத்தில் நாம் நடந்துகொள்ள வேண்டிய முறையும் தெரிகின்றது.

(ண்) மேற்படி பாபத்தை வெறுத்துப் புண்ணியமேபுரியும்படி செய்யுந்தன்மையது. இத்தகைய பெருமையான குணங்களை யளிக்கக்கூடியது.

(த்) மேற்படி பிறநாட்டவரோடு நட்பு பாராட்டியவர்களை யாதரிக்கக்கூடிய மதியையளிக்கக் கூடியது.

(ந்) மேற்படி அண்டினவர்களை யாதரித்து காக்கும் அறிவினை யளிக்கவல்லது.

மேற்கண்ட தன்மைகளைப் பார்க்கக் கூடியதான தன்மையது தேசபாஷை யென்பதை யூன்றிக் கவனிக்கவேண்டுதும். இதனுல் ஆங்கிலம் கற்கப்படா தென்பது கருத்தன்று. நமது பாஷையில் ஓரளவு கற்றதும், அந்நிய பாஷையைக் கற்கமுயன்ருல் வெகு சுலபமாய்க் கற்பதுடன் விஷயங்களும் செவ்வனே விளங்கும். இம்முறையினுல் நம்மவர்கள் முதற்றரமான முன்னேற்ற மெய்தமுடியும்.

ஒரு சிலர் வயிற்றுப் பிழைப்பினிமித்தம் கல்வி கற்கவேண்டுமென்றும், ஒரு சிலர் உலக மதிப்பினிமித்தம் கல்வி கற்கவேண்டுமென்றும், ஒரு சிலர் கதை காவிய மியற்றுதற்கும், செய்யுள் செய்வதற்கும் கல்வி கற்கவேண்டுமென்றும் கூறுகின்றனர். ஆனல் கல்வியை எதற்காகக் கற்கவேண்டுமென்று அவர்க ளறியாதது பேதமைத்தனமென்றே கூறவேண்டும்.

கல்வியானது மானிடர்க்கு உற்றதுணையென்பதும், அது எவர் மாட்டு விளங்குகின்றதோ அவர்க்கு அளிப்ப தென்னையெனின்,

" அறம் பொருள் இன்பம் வீடும் பயக்கும்
புறங்கடை நல் இசையும் நாட்டும்—உறுங்கவல் ஒன்று
உற்றுழியும் கைகொடுக்கும் கல்வியினும் இங்கு இல்லை
சிறு உயிர்க்கு உற்ற துணை.

இதன் பொருள் விளக்கத்தை விவரிக்குதும். அவை:—

(அ) அறம்:—உலகில் நாம் செய்யவேண்டிய தருமங்களை விளக்கி நம்மை சீர்படுத்துகிறது. அறம் என்பதற்குப் பிறர்க் குதவுதலென்

றும், ஆசார அநுஷ்டானமென்றும், நீதியென்றும் பலபெயர்பெறும். இஃதல்லாமல் சன்மார்க்கத்திற் கேதுவானதும், உலகத்தில் கொண்டாடப்பெற்றதும், என்றும் குன்றாப் புகழுடையதான தன்மையை யளிக்கக் கூடியதும், பூதிசாதனமாவதும் இன்னும் பலவுமாம்.

(ஆ) இன்பம்:—இகத்திற்கு வேண்டியதான செல்வப் பொருளையும், இயற்கையான அறிவுப் பொருளையும், கல்வி யென்னும் கருப் பொருளையும், கற்றதனாலாய பயனும் பொருளையும், கற்பாந்த காலந் தொட்டு கவி, காவியமியற்றிய புலவர்கள் அவற்றில் புதைத்துவைத்த தான செப்பொருளையும் அறிந்து அடைந்து ஆனந்தமாம் பொருளை யடையச்செய்யும் என்பதும் இன்னும் பலவுமாம்.

(இ) இன்பம்:—இகத்திற்கு வேண்டியதும் பரத்திற்கு வேண்டியதுமான தென்றும், பரத்திற்குரியது உத்தமமான (Original) தென்றும், இகத்திற்குரியது நகல் (Duplicate) என்றும், அசல் என்பதை அறிவினா லறிந்து ஆனந்திக்கத் தக்கதென்றும், நகலை அநுபவித்து அறியத்தக்க தென்றும், நகலைக்கொண்டே அசல் என்னும் உத்தமமானதை அறியவேண்டு மென்பதும், இஃதல்லாமல் இன்பம் என்பதற்கு கல்விகற்றபின் அதன் ஸ்வாரஸ்யங்களை நுட்பமாயறிந்து ஆனந்திப்பதென்றும், அவ்விஷயப் பொலிவைப் பிறர்க்குரைத்து ஆனந்திப்பதென்றும்; இல்லிலும், இஷ்டரிடத்தும், இன்னுமுள்ள ஜீவஜெந்துக்களிடத்தும், இயற்கைப் பொருள்களிடத்தும், இன்பப் பொருளாய் எல்லாவற்றுள்ளும் பொதிந்துவிளங்கும் இறைவனிடத்தும், இறைவன் திருநாமத்தை யுச்சரிக்குமிடத்தும், எய்தும் ஒரு பொருளுக்கும் இன்னும் பலவிற்குமாம்.

(ஈ) வீடு:—நாம் வசித்ததற்குரிய இடம் என்பதுதான் பொருத்த மெனினும் இவண் இதற்கு மோக்ஷம் என்னும் ஒரு பொருளு மில்லாமலில்லை. ஆனால், நமது வியாக்கியானமானது ஸ்வதந்தரத்தைப் பற்றியதெனினும், நாம் வாழ்வதற்கு சௌகரியமாயும் பிறரது ஆதிக்கமின்றியும், பலரும் போற்றத் தகுந்ததாயு மிருக்கும் இருக்கைக்குப் பெயராகும். அதாவது புலமையில் வல்லானொருவன் வாழும் வீடு, குடியிருக்கு மிடமெனினும், பலரும்விரும்பி வருவதற்கேதுவானதாயும், அவன் வதிதலினால் வீட்டுக்குடையவருக்குக் கௌரவ மேற்படுவதாலும், அதோடு நில்லாமல், நல்லாரைக் காண்பது என்றும் நன்றென்று எவரும் நவிலும் தன்மையதாயும், நாத ஸ்வரூபியான நாயகன் திருநாமம் ஸதா பஜிக்கப்படுவதாலும் நவையிலாததாயு மிராநின்றதாகின்றதோடு, பரமாத்மாவின் பிரதியான ஆத்மா வசித்ததற் கேதுவான கல்வி நலம் நிரம்பின சரீரியான பண்டிதசிரோமணியானவன் தானும் குணப்பட்டு பிறரையும் சீர்திருத்தி விச்ராந்தியுடன் வாழ்தல்போலவும், பந்தனையகன்று பற்றற்று இருத்தல் போலவும் ஸதா இன்பமான பேரின்பத்தையே ஸ்வீகரித்திருக்கு மிடமாம். இஃதன்றி இன்னும் பலவுமாம்.

(உ) பயக்கும்:—மேற்கூறியதான நால்விஷயங்களையும் அடையச்செய்யுமென்றும், அதன் பயன்களையடையச்செய்யு மென்பதாம்;

(ஊ) புறம்கடை நல்லசையும் நாட்டும்:—உலகத்தின் பலபாகத்திலும், உலகம் உள்ளளவும் பெருமையையும் புகழையும் ஸ்திரமாய் நிலைக்கச் செய்யும்.

(எ) உறும் கவல் ஒன்று உற்றுழியும்:—சமயா சமயங்களில் ஏற்படும் குடும்பக் கவலைகளையும், தரித்திரத்தினு லேற்படும் கவலைகளையும் இன்னும் பலவிதங்களினு லேற்படும் கவலைகளையும் ஆப்த நண்பன்போலிருந்து நீக்கும் தன்மையதாதலினுலும்;

(ஏ) கைகொடுக்கும்:—'எண்ணித் துணிவது கருமம், துணிந்த பின் - எண்ணுவ மென்ப திழுக்கு'' என்னும் மூதுரையை யடிக்கடி ஸ்பஷ்டமாய்க்காட்டி நம்மை உற்சாகப்படுத்தி எந்தக்காரியத்தையும் நிதானித்து ஆலோசித்து செய்பச்செய்து அதனை சித்திக்கச்செய்யும் தன்மைய தாதலினுலும்;

(ஐ) கல்வியிலும்:—நற்பாந்த காலத்தும் அழிபாது சகலத்திற்கும் ஆதாரபூதமாய் நிலைபெற்றொளிருவதும், ஒரு முறை தன்னை யப்பியசித்தவனை விட்டுவிடாது அவன் பிறக்கும் பிறவிகடோறும் வந்து உதவுவதுமாகிய தாதலினுலும்;

(ஒ) இங்கு இல்லை சிற்று உயிர்க்கு உற்றதுணை:—அணுவளவாயின வஸ்தவிலிருந்து மேருவ்ரையுள்ளதான பிரதி வஸ்துவிலும் பிரதிபிம்பத்துள்ளதான ஆன்மகோடியானது மானிடஜன்மத்திலும் புகுந்துலாவுவதால், அத்திமுதல் எறும்பீரான ஜீவராசிகளிலும் வசிப்பது. இதனை சிற்றுயிர் என்றும் கூறினர் என்றே கொள்ளவும்தகும். ஆதலினல், இத்தகைய உயிர் கல்வியறி வில்லாவிடின் மிகுந்த துன்பமெய்தி யவதிப்படுமாதலினல் கல்வி யெனும் ஒரு கருவியைக் கைப்பற்றிவிடுமாயின் இதற்கு மிக்கமேன்மை யேற்படுமென்பது கருதியே கல்விவல்லோர் இவ்வையகத்தில் மாந்தாயவதரித்தோர் பலதுன்பங்களினின்றும் நீங்கி வாழ்வதற்கு துணையாயுள்ளது கல்வியென்பதனை யறிவுறுத்துவான் வேண்டி இங்கு - இவ்வுலகில், சிறு உயிர்க்கு மானிடாாய்ப் பிறந்தார்க்கு, உற்றதுணை-உரிமையானதுணை, இல்லை-இதனினும் வேறொன்றில்லையெனப் புகன்றுபோயினர் என்பதேயாகும்.

ஆதலினல் நம் தேசியக்கல்வியின் நலனையும், சிறப்பையும், பெருமையையும், அதிகம் விஸ்தரித்துக்கூறவேண்டுவது அவஸ்யமின்றாயினும், தற்கால நாகரீகத்தில் நாம் விரும்பி நிற்பதும், நமக்கு

அத்யாவஸ்யமாய் வேண்டுவதுமான சுயேச்சையை யடையவும் அநுபவிக்கவும் கருவியாய் இருப்பது தேசியக்கல்வியேயன்றோ? இதனை நாம் மிக்க சிரத்தையுடன் நம் சந்ததியாருக்குப் போதித்து வருவோமாயின் நாம் விரும்பும் ஸ்வதந்தரம் ஏன் நம்மை யடையாது?

ஒவ்வொருவரும் நமது முன்னேற்றத்தையும் நம் சந்ததியாரின் முன்னேற்றத்தையும் கருதி, தேசியக்கல்வியையே தத்தம் சிறுவர்களுக்கு போதிக்க முயற்சிப்பார்களாயின், நாம் விரும்பும் ஸ்வயராஜ்யத்தின் முன்னணியில் நிறுத்தப்படுவோம். ஓம் தத் ஸத்.

பத்திரிகாசிரியர்.

ராமச்சந்திரன் கானேக்கிச் செல்வதைப்பற்றி ஆக்ஷேபனை சமாதானங்கள்

அல்லது

பகவத்கீதோபதேசம்.

(251-ம் பக்கத் தொடர்ச்சி.

லக்ஷ்மணன் மீண்டும் தமயனை நோக்கி, "அண்ணா! பெரியவரும் குருவுமாயிருந்தாலும், மகாகாமியும் கெட்ட மார்க்கத்திலிறங்கினவருமான பிதாவை நிக்ரஹஞ் செய்தலும் தர்மமாகும். எந்த பலத்தைக்கொண்டு ராஜா கைகேயிக்கு ஏகதேசத்தில் ராஜ்ய முழுவதையுங் கொடுக்க ஸம்மதித்தார்! நமக்கும் உரிமையாயுள்ள இந்த ராஜ்யத்தை, இந்த ரகுவம்ச பரம்பரையில் ஜ்யேஷ்டனடையவேண்டிய இந்த ராஜ்யத்தை, ராஜாவே பார்த்துக் கொடுக்கவேண்டுமென்பதென்ன? ராஜனுக்கென்ன வல்லமை யிருக்கின்றது? வரப்ரதான காலமெப்போ, வரப்ரயோஜன காலமெப்போ? ஏன் இந்த விஷயத்தில் மலைப்பு? என்னுடன் கூடிய தங்களை யெதிர்த்துப்போர் புரிந்து நம்மிடமிருந்து இந்த ராஜ்யத்தை ஜயித்துக்கொண்டுபோக எவராலேனு முடியுமா? சூரர்களான நம்மிடம் தசரதர் ஜபஞ்சாயாது, சாயாது!" என்று கௌஸல்யா தேவியாரை நோக்கி, "அம்மா! என்னை நம்புங்கள்! நானும் ஞாதியல்ல, நிஜத்தில் இயற்கையாகவே நிஜத்தில் ராமண்ணாவின் போக்கின்படி அவரை யனுசரித்து நடப்பவன். அவருடைய அந்தரங்கமான தோழனுமாவேன். அவரே எனக்கு கதி. இந்த தனுவின்பேரில் சபதஞ்செய்கின்றேன் அவரே எனக்கு வேண்டியவரே யல்லாமல் அவரையன்றி வேறொருவரும் எனக்கு வேண்டியவரல்ல. ராமபிரான் தீயில் விழுவதாயினும், கொடுங்கானகம் புகுவதாயினும் நானும் அந்த மகானுபாவனுக்கு

முன் செல்வேனேயல்லாமல் பின்னிடைந்து நில்லேன். இதில் சிறி தளவுஞ் சந்தேகங்கொள்ள வேண்டுவதில்லை. என் அம்மணி!'' என்ற இளையவருடைய உறுதிப்பாடுகளைக்கேட்ட கௌஸல்யாதேவி யார் துன்பம் பொறுக்கமாட்டாமல் விம்மி விம்மியழுதார். மீண்டும் லக்ஷ்மணஸ்வாமி அவரைநோக்கி, "என் அம்மா! காட்டுக்குப்போகின் றேன் என்றுரைக்கும் ராமண்ணாவின் மொழிகளைக் கேட்டன்றோ நீரும் துக்கப்படுகின்றீர். இதோ என் பராக்ரமத்தைச் செவ்வனே காட்டுகின்றேன். ஆனால் அண்ணாவின் அனுமதிமட்டில் வேண்டும். அவரிடம் அனுமதி வாங்கிக்கொடுங்கள். இந்த நொடியிலேயே உமது துக்கத்தை மாற்றிவிடுகின்றேன்'' என்று மனமிளகக் கனிந்து கூறினர்.

லக்ஷ்மணன் வார்த்தையைக்கேட்டு மயங்கி பிரமிப்படைந்த கௌஸல்யை, "குழந்தாய்! ராமச்சந்த்ரா! இளையவன் மொழிந்தன வெல்லாங்கேட்டனையோ? நின் விருப்பம் யாதோ? நீ பார்த்து மன திலெண்ணினால் அது நன்றாய் முடியுமே! கண்மணி, ராமா! மகா ராஜனும் வாய்விட்டு கண்டோக்தியாய்ச் சொல்லாமல் எனக்கு நேர் விரோதியான சக்களத்தி கைகேயியின் அதர்மமான சொல்லைக் கேட்டு என்னை இந்த அவிதியில் விட்டு நீ வனம் போவது சரி யாமோ? எப்படியாவது நான் கெட்டுப்போக வேண்டுமென்ற எண் ணம் அவளுக்கு. தர்மிஷ்ட! தர்மமறிந்த நீ தர்மமார்க்கத்திலிருக்க விரும்பினால், கைகேயியே ராஜ்ய சம்பத்தை அபகரித்துக் கொண்டா லும், நீ காடுநோக்கிப் போகாமலாவது மாதாவான எனக்கு, உத்தம தர்மமார்க்கமான சிசுருஷைகளைப் புரிந்துக்கொண்டு இங்கேயே என் பக்கலிலிருந்து விடலாகாதா? உபாத்தியாயனைவிட ஆச்சாரியன் (குரு) பத்துபங்கும், ஆச்சாரியனைவிட பிதா நூறுபங்கும், பிதாவை விட மாதா ஆயிரம்பங்கும் சிரேஷ்டமாகலின், என் மன விருப்பப் படி என்வாக்கியப்படி நடக்கக் கடவாய். பூர்வத்தில் காச்யபன் வீட்டிலிருந்து கொண்டே மாத்ரு சிசுருஷை செய் வந்திருக்கின் றனன். அந்த தபோமகிமையினுலே சுவர்க்கலோகமடைந்து சமஸ்த தேவதைகட்கும் மேலான பதவியை யடைந்தனன். அத்தகை போனே காச்யப பிரஜாபதி. ஆகையால் மகாராஜன் உத்தரவளித் தாலும் அவரைக்காட்டிலும் ஆயிரம்பங்கதிகமாயிருக்கும் நின்மாதா வான என் அனுமதியில்லாமல் நீ வனஞ் செல்லலாகாது. அல்லது பிதாவின் கட்டளைப்படி நீ போக விரும்பினால் என்னையுங்கூட அழைத்துப்போகவேண்டும். அரண்யத்தில் திருணங்களை ஆகாரம் பண்ணிக்கொண்டாவது வசிப்பதே சிலாக்கிய தரமும் சிரேயஸ்கரமு மான காரியமாகும். நீ பக்கத்திலிருப்பதனால் என்னுடைய சோகா க்னி தணியும். என்னைவிட்டு நீ வனஞ்சென்றால் நான் பிராணனை விடத்தான் நேரிடும். நான் பிரயோபவேசம் பண்ணினாலும் நீ நர

கத்தை யடைய நேரிடும். அதுவும் எனக்கு வருத்தந்தான். ஆதியில் சமுத்திரன் தன் தாயாருக்கு வருத்தத்தை யுண்டுபண்ணி கஷ்டத்தை யடைந்திருக்கின்றனன். ஆகையால் நானும் வனத்திற்கு வருவேன், நீ அழைத்துச் செல்லத்தான் வேண்டும்'' என்றனள்.

அன்னையாரின் பிடிவாதமும் அன்புமுள்ள மொழிகளைக்கேட்ட ராமச்சந்திரன், "அம்மா! பித்ரு வாக்கியத்தை நிராகரித் தொழுகுதல் கூடாத காரியமாகலின், நான் வனஞ் செல்லாதிருக்க முடியாது. நின் (மாத்ரு) வாக்கியத்தை ஆயிரம் பங்காய் மதித்து பணிந்தொழுக வேண்டியவனாயினும், பிதாவின் முதன்மையான கட்டளையைச் செய்து முடித்த பிறகு, நின்னாலிடப்பட்ட கட்டளையையும் செய்கின்றேன். நான் இப்பொழுது வனஞ்சென்று வருமாறு அனுக்ரஹஞ்செய்ய வேண்டும். கண்டு மகரிஷியானவர், தர்ம சாஸ்திரமறிந்தவர், பிதாவின் கட்டளையை நிறைவேற்றக்கருதி தகாததான பசுவைக்கொன்றனர்; நான்வனம்போவது தகாதகாத காரியமாமோ! சகரபுத்திரர்கள் பூமியை வெட்டிப்பிளந்தனர்; அது தகாத காரியம்; பூமியைப் பிளந்துகொண்டு பாதாளஞ்சென்றனர்; கபிலரால் எரிக்கப்பட்டு நீறுபினர். நான் வனவாசஞ் செய்யப்போகுங்கால் நிர்ணயம் பதினான்கு வருஷங்களேயாம். அது ஒரு பெரிய காரியமும் தகாத காரியமு மாகமாட்டாது. தந்தை ஜமதக்கினியின் கட்டளைப்படி பரசுராமர் ரேணுகையின் தலையைக்கொய்தனர். தாயைக் கொன்றது தகாத காரியம். அந்தப்படி நான் தகாத காரியஞ் செய்யவில்லை. ஆனால் நான் வனஞ்செல்வதில் நினக்கு துக்கந்தான். தேவ துல்லயரான பலர் பல அரிய காரியங்களைச் செய்திருக்கின்றனர். தகாத காரியமாயினும், சாத்தியமல்லாத சாகஸ காரியமாயினும், பித்ரு நியமனப்படி யொழுகவேண்டியதே தர்மம். (தொடரும்,)

துன்றையூர் மா. சுப்பராமய்யர்.

ஜீவாத்மாவும் பரமாத்மாவும்.

சில தீர்க்கதரிசிகளின் திருவாய் மொழிகள்.

1. ஆத்மாவுக்குப் பிறப்பு இறப்பு இல்லை, ஒருசமயம் இருந்து மற்றொரு சமயம் இல்லாமற் போவதில்லை. பிறப்பற்று சாஸ்வதமாய் எப்பொழுதும் எக்காலத்திலும் இருக்கும் ஆத்மாவானவர் இத்தேகம் மரிக்கும்போது மரிப்பவரல்லர். அதற்கரியராய் அழிவற்றவராய் சாச்வதராயிருக்கும் ஸகுண ஸ்வரூபியானவர். உள்ளும் புறமுமாய் பிரவேசித்திருக்கிறார். ஸ்ரீ கிருஷ்ணபகவான்.

2. ஒவ்வொரு உடம்பின் உள்ளுமிருக்கும் "இவ்வாத்மா'' எப்பொழுதும் அழிவில்லாதது. ஆயுதங்களால் பிளக்கப்படாதது. நீர்

நெருப்பு காற்று இவைகளாலும் இன்னும் எதனாலும் அபாயமற்றது. ஆதலால் அதனைக் குறித்து விசனப்படக் காரணமேயில்லை.

ஸ்ரீகிருஷ்ணபகவான்.

3. கிழிந்துபோன உடைகளைக் களைந்தெறிந்து புதிய துணிகளை அணிவதுபோல் இவ்வுடம்பில் வீற்றிருக்கும் 'ஆத்மா' தேய்ந்தும் பல அழிந்தும்போன தேகங்களை விட்டுப் புதிய தேகங்களில் பிரவேசிப்பார். ஸ்ரீகிருஷணபகவான்.

4. சரீரம் சிருஷ்டிக்கப்பட்டது. அதனால் இது மறுபடியும் அழிந்துபோக வேண்டித்தான் வரும். ஆனால் "ஆத்மாவுக்கு அழிவில்லை" பழுத்த பாக்கிலே பாக்கு ஓட்டிலிருந்தும் மேல்மூடியிலிருந்தும் வேறாய் விடுகிறது. பாக்கு பச்சையாயிருக்கும்பொழுது அவற்றைப் பிரிப்பது மிகவும் கஷ்டம். ஈச்வரன் அடையப்பட்டுவிட்டால் அவர் அநுபவத்திலே அறியப்பட்டுவிட்டால் ஆத்மா சரீரத்தினின்றும் வேறானது என்றுள்ள ஞானம் உதயமாகிறது

ஸ்ரீராமகிருஷ்ணபரமஹம்சர்.

5. நாம் வேறு ஜென்மம் எடுத்தபோது "ஆத்மா" அழிந்து போவதில்லை. இதையறியாத மூடன் இவன் இறந்தான் எனப் பொய் பேசுகிறான், உண்மையில் "ஜீவன்" வேறு சரீரத்திற் பிரவேசிக்கிறான். இறத்தல் என்பது இவன் தேகம் அழிவதுதான். உண்மையில் ஜீவன் அழிவதில்லை. வியாசபாரதம்.

6. மலைகளைப் பெயர்த்து சமுத்திரத்திற்கு இரையாக்கிவிடும் இவ்வகண்ட பூமியும் கானல் நீர்போல் அநித்திய வஸ்துவாதலால் அழிவற்ற ஆத்மாவை எதிர்த்து ஜயிக்கமுடியுமா. தாமஸ் கார்லைல்.

7. எல்லா ஜீவராசிகளின் உள்ளும் புறமும் இருக்கும் பரம் பொருள் ஓரே "ஆத்மா" வெவ்வேறு வஸ்துக்களில் இருந்து அவற்றை யியக்கும் தன்னையே வெவ்வேறாகத் தோன்றி வைக்கிறது.

உபநிடதம்.

8. 'ஆத்மா' சுத்த ஞானமயமாய் ஆனந்த ஸ்வரூபியாய் இருப்பவர், தேகமோ மாம்ஸத்தினாலும் மற்ற இதரதாதுக்களாலும் ஆக்கப்பட்டு அசுத்தமயமா யிருப்பது. இவ்விரண்டையும் ஒன்றாக நினைத்துப் பேசுகிறார்களே ? இதைவிடக் கேவலமான அஞ்ஞானம் உண்டா. ஸ்ரீ சங்கராசாரியார்.

9. உன் உள்ளேயே வீற்றிருந்து நீ போகுமிடமெல்லாம் கூடவே யிருக்கும் ஈச்வரனை நீ யறியாய். உனக்குள் அந்தர்யாமியா யிருக்கும் பகவானை பாபத் தொழில்களாலும் தீய எண்ணங்களாலும் நீ அவமதித்து வருவதையும் கவனிக்கயில்லை. ஆனால் நீசெய்வது பேசு

வது யாவற்றையும் ஈச்வரன் ஆத்மஸ்ரூபியாய் உன் உள்ளேயே யிருந்து உணர்ந்துகொண்டுதான் வருகிறார். எபிக்டஸ்.

10. இரண்டற்ற ப்ரமம் ஒன்றே. அதுவே நான் சாச்வதனுய் ஸர்வத்திலும் இருக்கும் நான் சச்சிதானந்த மூர்த்தி உருவம் குணம் மாறுதல், முடிவு, இறப்பு, பிறப்பு, குற்றம், குறை, வ்யாதி, அழிவு, இவையொன்றுமில்லாத யான் இப்பொய்யுடம்பல்லேன். இதுதான் உண்மை. ஸ்ரீ சங்கராசாரியார்.

11. சில மூடாத்மாக்கள் பிதற்றுவதுபோலவே “நான் மகா பாபி” “நான் பொய்யன்” கொடியன், வெறியன், மடையன் என்றே உளறிக்கொண் டிருக்காதே. உள்ளும் புறமும் ஊடுருவி நிற்கும் ஆத்மாவே நீ யாதலால் இவ்வுடம்பின்மேலுள்ள ஆசையை அப்பால் அகற்றிவிடு. ஸ்வாமி விவேகானந்தர்.

12. உலக ஜனங்கள் பலவிதமான கஷ்டங்கள் அடைவதற்குக் காரணம் “தன்னை யறியாமையே” தனக்குள்ளும் புறமும் இருக்கும் ஸத் சித் ஆனந்த “ஆத்மாவே தான்” என்றும், ஜீவன் வேறு. ஈச்வரன்வேறு என்றெண்ணுமல் அனேவோர்க்குள்ளும் அமைந்த ஈசன் நானே என்றறிவாயானல் ஸர்வப்ரபஞ்ச நாயகனுவாய்.

ஸ்வாமி ராமதீரத்.

13. எல்லா ஜீவரிலும் எல்லா தேவரிலும் எப்புறமும் எல்லாவிடத்திலும் இருப்பவரே ப்ரமம். சிறிதினும் சிறியராய் அணுவுக்கும் அணுவாய் என் ஹ்ருதயகுகையில் வசிப்பவர் அவரே. ஆகாயம் மற்றண்டங்கள் அனைத்தினும் பெரியவராய்ப் படர்ந்தவரும் அவரே. செயல்கள் இச்சைகள் வாசனைகள் ருசிகள் அனைத்தும் அவரிடமிருந்தே உற்பவிக்கின்றன. எங்கும் நிறைந்த அவர் பேசுவதில்லை ஆச்சரியப்படுவதில்லை. என் ஹ்ருதயத்திலிருக்கும் அப்பரம்பொருளே கடவுள் இவ்வுடம்பைவிட்டு நான் நீங்கும்போது அவரோடு கலந்து விடுவேன். உபநிடதம்

14. ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் உள்ள சம்பந்தமென்ன? ஒரு நீரோட்டத்துக்குக் குறுக்கே ஒரு சிறு மரத்துண்டு போடப்பட்டபொழுது தண்ணீர் இரண்டாய்ப்பிரிந்ததாகக் காணப்படுவதுபோல மகா ப்பொருளாகிய பிரம்மவஸ்து மாயா உபாதியினல் இரண்டாகப் பிரிக்கப்பட்டது போலக் காணப்படுகின்றது. உண்மையில் அவையிரண்டும் ஒன்றே. ஸ்ரீ கிருஷ்ணபரமஹம்சா.

இவற்றிற் பல இகபரசுகம் என்பதில் எடுத்தெழுதப்பட்டது.

K. R. கணபதி பிள்ளை, சுண்டக்காமுத்தூர்.

வறுமை.

வறுமை யெனப்படும் வாய்மை கேண்மோ,
சிறுமை சிறுமை செப்புந் தரமோ
உலகிடை மாக்கள் உளங்களித் தின்பப்
பலனடையச் செயும் பாக்கிய மிலாதே,
மிடியெனு மொன்று மேவி விட்டால்
கடிநடை யுடைய கனபந் துக்களும்,
மடிமேல் இருந்த மங்கையர் தாமும்,
அடிமை புரிந்த அன்னிய மனிதரும்,
கைமாத் தீர்த்த கனவான் தாமும்,
நாமா நயந்தும் நன்மொழி பகரார்.
தேமா மொழிகள் சிறிதுங் கிடையா(து)
ஏமாந் தாற்போல் ஏங்கி இளைத்துப்
போமா றேதும் புலப்ப டாமல்,
காமாட் டியர்பாற் கருத்துஞ் செல்ல;
அன்னோர் பாங்கர் அடங்கிப் பயந்து
நன்னயங் கொள்ள நாடும் பாரீர்.
என்னே இதன்திரம் இசைக்கிற் பின்னும்
கொன்னே திரிந்து குறிப்பிட் டோர்பால்
செல்லவும் நாணிச் செல்லிட மில்லா(து)
அல்லும் பகலும் அடங்கி அகத்தில்
பேயன் போலப் பேடி ஆக்கி
" வாய தில்லா வற்சரம்" எனவே
தேய மாந்தர் தேர்ந்து பின்னும்
நாய மில்லா நடுமொழி கூறி
வா இரு போ வென வழுத்தி வாயில்
கூவி அழைத்த குறிப்பையும் மாற்றி
தேகி இவனே தீண்ட விட்டால்
போகுந் தனமெனப் புறத்துப் பேசி
என்றும் மௌனம் இணக்க மெனவே
ஒன்றும் பேசா(து) ஒதுங்கிப் போவார்.
நேசர் தாமும் நெடுமொழி கூறி
வாச லிடமும் வாரா தொழிவர்.
காற்றும் இவரைக் காண வஞ்சும்,
கூற்றும் இவரைக் கொள்ளா தொழியும்
உதவி பெற்ற உற்றார் தாமும்
கதவை மறித்துக் கஷ்டஞ் செய்வார்,
பிணியே இவர்க்குப் பெருந்துணை யாகி
அணிபோல் என்றும் அகலாதிருக்கும்.
பணமே பெற்ற பந்து எவரும்
குணமாய்ப் பேசக் கூசித் திராக்

சங்கடத் தாலே தனிமொழி கூறிப்
பங்கைக் குறைப்பர்; பாரினில் இவர்க்கு
எங்கே போயினும் இடுக்கண் ஒழிய
நங்கேள் பாரீர், நலமொன் றில்லை
எப்படி யேனும் இயற்றிய பொருளைக்
கைப்பட வீந்துங் காரியம் ஒன்றுப்
வயப்படா தலைந்து வருத்தஞ் செய்யும்
நயமாய்க் கேட்கினும் நாட்டிடை மிடியர்
பயமே கொள்வர் பார்த்தவர் நாமும்
தயவாய்க் காட்டித் தந்திரம் செய்வர்.
எத்தனை கொடுத்தும் இணக்கம் எதுவும்
சித்தம் மகிழச் சிறிதும் அடையார்.
இத்தகைத் துன்பம் ஏனோ இவர்க்கு
ஒத்த மனமாய் ஒருவர்க் கேனும்
முன்னாள் தனிலே முழித்துப் பார்த்து
தன்னால் ஆன தக்க முயற்சி
செய்து யார்க்குஞ் சிறிதுங் கொடாது
பைய விருந்து பணத்தைக் காத்து
நைய வுரைத்து நாலா பேரையும்
ஐயோ எனவே அலறிக் கதற
விட்ட குறையே விராட்டு ரூபம்
தொட்டு வந்து சுடுது பாரீர்.
ஆகையால், அன்பீர், அவனியில் யார்க்கும்
ஓகையாய் நடந்து உம்மால் ஆன
அறவினை புரிந்து அரனை நினைந்து
திறம்பெது வீரேல் ஜென்மந் தோறும்
நலமாம் பதவி நாடி வந்து
பலமே புரிந்து பகவன் பதத்தில்
சேர்க்கும் இதுவே ஜென்மம் எடுத்த
யார்க்கும் பொதுவென அறைந்தேன் யானே.

S. ஆதிநாராயண பிள்ளை, ஸ்கூல் மாஸ்டர், ஆனைமலை.

இனிமையான தமிழ் நாவல்கள்.

சுந்தர்சிங்	1	8	0	விவேகாநந்தன்	1	4	0	வசீகரன்	0	12	0
மோகன்சிங்	1	4	0	தயாபரசுந்தரி	0	12	0	கமலவல்லி	0	12	0
சித்ரரேகை	1	8	0	கற்பகவல்லி	0	12	0	தர்மாம்பாள்	1	12	0
தனபாலன்	2	0	0	ஞானசுந்தரன்	0	12	0	கிருபாம்பாள்	0	8	0
பத்மநாபன்	0	14	0	சௌந்தராபாய்	1	0	0	அம்புஜாக்ஷி	2	0	0

மானேஜர், "இரஞ்சித போதினி" ஆபீஸ்,
அருணாசல முதலி தெரு, சௌகார்பேட்டை, சென்னை.

மனிதமூலராசி.

"ஆரிய சித்தாந்தம்."

நாம் வசிக்கும் இப்பூகோளம் தோன்றி சுமார் முப்பதுகோடி வருஷங்கள்வரை கொதிப்பும் கொந்தளிப்பும் குழப்பமும் அதிலிருந்தது. அப்பால் மனிதர்கள் வசிக்கத்தகுதியாயிற்று. நீருக்குள்முழுகியிருந்த தரை ஒரு இடத்தில் நீருக்குமேல் மெல்ல மெல்ல கிளம்பித் தோன்றியது. இதுதான் மேருமலைச்சிகரம்—வடக்குத் துருவத்தின் முடி, முதற்கண்டம் உண்டாவதற்கு ஆரம்பம். இந்தக்கண்டத்திற்கு சுவேத தீவு அல்லது வெண்தீவு எனப்பெயர். சிலவேளைகளில ஜம்புத்தீவு எனவும் புஷ்கரத் தீவு எனவும் சொல்லுவார்கள். ஆனால் இப்பெயர்கள் வேறு இடங்களையும் குறிக்கும். இந்த முதற் கண்டம் அல்லது தீவில் தோன்றிய மனிதர் மூலராசி எனப்படுவர். ஒவ்வொரு ராசியிலும் ஏழு உட்பிரிவுக ளிருக்கின்றமையால் இராசியை மூலராசியெனவும், உட்பிரிவுகளை உள்ளிராசி அல்லது உள்வீட்டிராசி யெனவும் சொல்லுவர். ஏழு உள்ளிராசிகளுந் தோன்றிவிட்டால்: அந்த மூலராசியின் காலம் கிட்டிவிடும். ஆயினும் ஒரு மூலராசி மனிதர்கள் இருக்கும்பொழுதே அடுத்த மூலராசி தோன்றும். சுவேத தீவில் முதல் மூலராசி மனிதர்களைப் பிதிர்தேவர்கள் தங்களிடமிருந்து பிதுக்கி வெளிவிட்டனர் ஆகையால் இம்மனிதர்களை பிதுர்களின் சாயைகள் எனவும் சொல்லுவார்கள். இவர்கள் தேகம் நமக்கு இருக்கும் தேகத்தைப்போல் தடித்ததன்று. அது பிராணமய திரவியம் அல்லது இக்காலத்தில் ஆங்கிலம் கற்றவர்கள் ஈதர் (Ether) என்று இப்பிராணமய திரவியத்தைச் சொல்லுவர். பிதுர்களுக்குத் தேகம் இந்த திரவியத்தா லானபடியால் அவர்கள் தங்கள் தேகத்தினின்றும் பிதுக்கின மனிதர்களின் சரீரமும் அப்படியிருந்தது. இம் முதல் மூலராசி மனிதர்கள் இப்பொழுது நாம் அறிந்திருக்கும் மனிதர்களைப்போ லல்லவாயினும்; தாயின் கர்ப்பததிலுள்ள கரு, மனித உருவத்துக்கு எவ்வித ஒற்றுமையும் இல்லாவிடினும் பக்குவ மடைந்தால், மனித உருவாகுந்தன்மையினால், பாலன், சிசு, குழந்தை, மனித சிசுவெனச் சொல்வதுபோல், இம்மனிதர்களையும் மனிதரெனச்சொல்லுவர். உணமையில் இவர்கள் மனிதவித்துகள். இவர்கள் மனித உருவில்லாமல் மிகப் படர்ந்து திட்டமும் தெளிவுமில்லாது மொத்தாகாரமாய் மனிதச்சாயலே அணுத்துணையு மின்றியிருப்பவர். இவர்களின் உயரம் 173 அடி. இவர்களுக்கு சத்தம்கேட்கும் கர்ண இந்திரியம் அல்லது சுரேத்திரேந்திரியம் ஒன்றுதான் முதலில் பக்குவப்படுகின்றது. உள்பிரஞ்ஞைமாத்திரம் உள்ள இவர்கள் இந்தக் கர்ண இந்திரியம் பக்குவப்படவும், வெளிப்பிரபஞ்சத்துடன் சம்மந்தப்பட்டு வெளிப்பிரஞ்ஞையடைந்து அப்பால் இந்த ஸ்தூலப்பிரபஞ்சத்தில்

அக்கினியை உணர்கின்றார்கள். அதாவது முதல் மூலராசி உருவங்களுக்குள் பிரவேசித்த ஜீவாத்மாக்கள், தங்கள் புது உருவங்கள் மூலமாய் ஸ்தூல உலகத்தில் அக்கினியை உணர்கின்றனர். இவ்வுருவங்களுக்கு ஆண் பெண் என்னும் சின்னங்களில்லை. தேகம் பருத்தும் தேகத்தினின்று முளைபோல் கிளம்பி அம்முளை வேறுபட்டும் இவ்விராசி மனிதர்கள் பெருகி விர்த்தியாகினர். இக்காலத்தும் சிலஜெந்துக்களைப் பல கூறுகளாக்கினால் அச்செந்துக்கள் அழிந்துபோகாமல் கூறுகளெல்லாம் தனித்தனி உயிர்த்துப்பல செந்துக்களாய் விர்த்தியாவதுபோல் இவர்களும் பெருகினார்கள். வேர்கள் எவ்வளவு பக்குவ மடையவேண்டுமோ அவ்வளவு பக்குவம் பெரும்பான்மையோர் அடைந்து இவர்கள் காலம் குறுக ஆரம்பித்தபோது, இரண்டாவது மூலராசி மனிதர்கள் தோன்றினர். கிம்புருடர் எனப்படுவோர் இவர்களே. இவர்களுக்கு வாசஸ்தானமாய் வடக்கு ஆசியா கண்டத்தில் "பிளக்ஷதீவு" என்று கண்டந்தோன்றியது. இவர்கள் தேகம் முன்னவர்களுடையதைவிட அதிகம் தடித்து குறுகலானது. உயரம் 120 அடி. இவர்களுக்கு கர்ண இந்திரியத்துடன்கூட ஸ்பரிசம் அல்லது ஊறு அறியும்படியான தொக்கிந்திரியம் அல்லது மெய்யிந்திரியம் பக்குவப்பட்டது. ஸ்தூல உலகத்தில் அக்கினியையும், வாயுவையும் உணர்ந்தார்கள் ஆண் பெண் சின்னம் இரண்டும் ஒரு உருவத்திலேயே குப்தமாக இருந்தது. அப்பால் இவர்கள் காலம்கிட்டவே மூன்றாவது மூலராசி மனிதர்கள் முக்கியமாய் தெற்கு இந்திய சமுத்திரம், "பசிபிக் மகாசமுத்திரம்" இப்பொழுது இருக்குமிடத்தில் "ஷால்மலிதீவு" என்னும் கண்டத்தில் தோன்றினார்கள். மேற்கு நாட்டார் இக்கண்டத்தை "லெமூரியா" (Lemuria) என்று கூறுவர். தேகம் நெருக்கமாகவும் கெட்டியாகவும் இருந்தது. அவர்கள் உயரம் 60 அடி. இவர்களுக்கு நேத்ர இந்திரியம் அல்லது சக்ஷு இந்திரியம் பக்குவப்பட்டது. ஆக இவர்களுக்கு மூன்று இந்திரியங்களிருந்தன. அக்கினி, வாயு, நீர் இவைகளை ஸ்தூல உலகத்தில் உணர்ந்தார்கள், ஆண் பெண் இரு உருவும் சேர்ந்த அர்த்தநாரித்தன்மை முதல் மூன்று உள்ளிராசிகளில் பக்குவப்பட்டு வந்து, மத்திய காலத்தில் அதாவது, நான்காவது உள்ளிராசியில் ஆண் பெண் வேற்றுமையடைந்தார்கள். ஹிரண்யாக்ஷன், ஹிரண்யகசிபு இவ்விராசியோர். இவர்களை தானவர்களென்று புராணங்கள் கூப்பிடும், அப்பால் அட்லான்டிக் மகாசமுத்திரம் இப்பொழுது இருக்கும் இடத்தில் உண்டாயிருந்த "குஷதீவு" என்னுங் கண்டத்தில் முன் மூன்று இந்திரியங்களோடு "வாய்" அல்லது "நாக்கு" இந்திரியமும் சேர்ந்து நான்கு இந்திரியங்கள் பக்குவத்துடன் கடினம்பொருந்தி 27 அடி உயரமுள்ள தேகத்துடன் நான்காவது மூலராசியோர் தோன்றினர். இவர்களை தைத்யர்கள் எனப்புராணம் சொல்லும். இராவணன் இவ்விராசியோன். இவர்களுக்குக் காமதத்துவம் மிகவிருத்தி.

இவர்கள் என்பது லட்சம் வருடங்களுக்கு முன் மூன்ருவது மூல ராசியினின்றும் பிரித்தெடுக்கப்பட்டார்கள எனக் குப்த சித்தாந்தம் சொல்லுகின்றது. முதல் மூன்று உள்ளிராசியோர் அசுரர்கள் என்றும் நான்காவது உள்ளிராசியோர் இராக்ஷசர் அல்லது அரக்கர் எனவும் சொல்லப்படுவர். ஐந்தாவது உள்ளிராசியிலிருந்து நமது "வைவஸ்வத்'' மநு பகவானுனவர் ஐந்தாவது மூலராசி ஜனங்களுக்கு வித்துகள் எடுத்தனர். மெல்லமெல்ல ஐந்தாவது மூலராசி வசிக்கதற்கான "கிரௌஞ்சதீவு'' என்பது வெளியில் தோன்றிற்று. அது இப்பொழுது உள்ள நிலப்பரப்பு. இவர்களுக்கு ஆரியர் எனப்பெயர். மனோதத்துவம் விகாசம் அதாவது பக்குவம் ஆதல். இவர்களை வைவஸ்வத மநுவானவர் மத்திய ஆசியாவில் வைத்துப் பரிபாலித்துப் பக்குவப் படுத்தினர். அவ்விடமிருந்து அவர்கள் பலவிடங்களுக்குப் பரவ ஆரம்பித்தனர்: முதற்பெருங் குடிபேற்றம் சுமார் எட்டரை லக்ஷம் வருடஙகளுக்குமுன் ஆரம்பமாய், தெற்கு நோக்கிச்சென்று ஆரியாவர்த்தம் என்றுசொல்லப்பட்ட வட இந்தியாவில்வந்து சிலர் தங்கினுர்கள். இவர்கள்தான் முதல் உள்ளிராசியோர். இரண்டாவது உள்ளிராசியோர் "ஆரியோ ஸெமிடிக் ஜாதியார்'' என்போர். இவர் மத்திய ஆசியாவிலிருந்து மேற்கே ஆப்கானிஸ்தான், அரேபியா முதலிய தேசங்களில் குடியேறினர். மூன்ருவது உள்ளிராசியோர் "இரேணியன்'' ஜாதியார் இரண்டாவது உள்ளிராசியோர் போன மார்க்கமாக் வடக்கும் கிழக்கும்சென்று பெர்ஷியா முதலிய இடங்களில் தங்கினர். நாலாவது உள்ளிராசியோர் "கெல்டிக்'' ஜாதியார். மேற்குப் போய் கிரீஸ், இட்டலி, பிரான்ஸ், ஐயர்லண்டு ஸ்காட்லாண்டு முதலிய தேசங்களில் தங்கினர். ஐந்தாவது உள்ளிராசியாராகிய "டியூடானிக்'' ஜாதியாரும் மேற்கு நோக்கிச் சென்று ஐரோப்பா மத்திய பிரதேசத்தில் தங்கினர். இப்பொழுது இவர்கள் எங்கும்பரவிவிட்டனர். நமது காருண்ய அரசாங்கத்தார் இவ்வகுப்பினர். இப்படி யிதுவரை ஐந்தாவது மூலராசியில் ஐந்தாவது உள்ளிராசிகள் மட்டுந்தான் நடைபெற்றிருக்கின்றன. இப்பொழுது ஆருவது உள்ளிராசிதோன்ற ஆரம்பம். ஐந்தாவது உள்ளிராசியினின்று இப்பொழுது ஆருவது உள்ளிராசிக்கு தகுதியானவர்களை ஆருவது மூலராசி மநு பிரித்தெடுத்துக்கொண்டிருக்கிறுர். இந்த ஆருவது உள்ளிராசியினின்றும் ஆருவது மூலராசி மனிதர்கள் வட அமெரிக்கா இப்பொழுதுள்ள இடம் முழுதி அவ்விடத்தில் "ஷாகதீவு'' என்று நிலம் தோன்றுவதில் குடியேறியிருப்பர். அப்பால் தென் அமெரிகா கண்டம் அழிந்து அவ்விடத்தில் தோன்றும் "புஷ்கரதீவு'' என்பதில் ஏழாவது மூலராசி மனிதர்கள் தோன்றுவார்கள். ஆருவது மூலராசி மனிதர்களுக்குப் புத்தி அல்லது அறிவு விசாலம். ஏழாவது மூலராசியாரில் மனிதன் பூரண நிலையடைவான். இந்த ஏழாவது மூலராசியின் முடிவு காலம் வரவே அவர்கள் தீவும் அழியும். ஒருங்கே இவ்வுலகமும் முடியும்.

கே. ஆர். கணபதி பிள்ளை, சுண்டக்காமுத்தூர்.

ஓர் கடிதம்,

எனது அன்பு மிக்க இரஞ்சித போதினி பத்திராதிபர் அவர்களுக்கு.

தாங்கள் அனுப்பிய இரஞ்சித போதினி தொகுதி 2 பகுதி 1 முதல் 6 முடிய உள்ள சஞ்சிகைகள் வரப்பெற்றேன். விஷயங்களைப் படித்து களி கூர்ந்தேன். அவா மிகுதியினால் முதல் தொகுதி முழுவதையும் படித்து ஆனந்தக்கடலில் மூழ்கினேன்.

ஜனங்களுக்குத் தெரியாத அநேக விஷயங்களை இது நன்கு போதிப்பதனால் இதை ஒரு "போதஸ்வரூபி"யாகச் சொல்லலாம். என்னால் கூடியமட்டும் இதைப் பரவச் செய்யவேண்டி முயற்சிகள் செய்துகொண்டும், இப்பத்திரிகைக் கேற்ற விஷயங்களை நான் தானம் செய்யவேண்டியும் முயற்சி செய்துகொண்டிருக்கிறேன். மற்ற பத்திரிகைகளுக் கெல்லாம் இதுவே தலைமை வகிக்கிறதென்று நான் மிக உறுதியாய்ச் சொல்லுவேன்.

இக்குறைந்த துகைக்கு வெளிவரும் நிறைந்த விஷயங்களடங்கிய "போதஸ்வரூபி" என்னும் இரஞ்சித போதினி என்றைக்கும் மார்க்கண்டன் போலவே சிரஞ்சீவி பட்டம்பெற்று, ஒவ்வொருவரிடமும் இலக்ஷ்மி வாசம் செய்வதுபோல் செய்வாளென நம்புகிறேன். இச் சுபகாரியம் நீடூழிகாலம் சிறப்புற்றோங்க, யான், சர்வேச்வரராயும், சர்வாந்தர்யாமியாயும் "கோடைகாலத்தில் கானலில் வருந்தி இளைத்து வெயர்த்துத் தாகித்து சோகித்து வந்தவர்களுக்குக் குளிர்த் தாமரை போடையும், அதனருகில் வடநிழலும்போல; தம்மால், பிறரால், தெய்வத்தால் வருவனவாகிய மூவகைத் தாபாக்கினியால் தகிக்கப்பட்டு, ஜனனவிடாய்கொண்டு மூர்ச்சித்து, வேறு கதியின்றித் திருவுளமே தஞ்சமென்று உண்மையாய் நம்பிவந்து, ஆசிரித்தவர்களுக்குத் தாமே ரக்ஷகராய், இளங்கன்றுக்கு இரங்கும் பசுபோலவும், அருங்குழந்தைக்குருகும் அன்னைபோலவும், திருவுளமிரங்கி அவர்கள் பாவித்தவண்ணம் அப்பொழுதே தோன்றி அவர்களைக் கை நழுவவிடாது அஞ்சேல் என்று ஆதரித்து இம்மையிற் சகல பாக்கியமுந் தந்து, மறுமையில் ஈடுமெடுப்புமில்லாத மோக்ஷசாம்ப்ராஜ்யத்தையும், அருளிச்செய்பவராயும், 'ராம' என்னும் தாரக நாமத்தையுடைய ஸ்ரீ ராமச்சந்திரனை அடிபணிந்து வணங்குகிறேன். சுபம்! சுபம்!! சுபம்!!!

S. N. கோபாலகிருஷ்ணய்யர்,

உபாத்தியாயர், பொங்கலூர்.

நற்சாக்ஷிப் பத்திரங்கள்.

I

அன்புடையீர்,

நாகரீகப் பேய்பிடித்தாட்டு மிக்கலிகாலத்தில் எண்ணற்ற பல பத்திரிகைகள் வெளிவந்துலாவியும் நம் பரதநாட்டிற்குத் தகுதியான முற்காலத்து நாகரீகமும், அதன் உன்னத நிலைமையுந் தெரிந்துகொள்வது அரிதினுமரிதாய்விட்டது.

ஆகவே, இச்சீர்கேடான நிலைமையைக்கருதி நம் பரதகண்டத்தில் தற்போது ஆங்காங்கும் பல பத்திரிகைகள் உற்பத்தியாகி நம் ஹிந்துமதப் பெருமை

யை யெடுத்துரைத்துவரு மிந்நாளில் தாங்களும் தேசாபிமானம், மதாபிமானம், தெய்வபக்தி, ஒற்றுமை முதலிய நன்னெறிபா லீடுபெட்டு இரஞ்சிதனெனும் திருநாமம் புனைந்து ஈசனருளால் முதலாவ தாண்டைப் பூர்த்திசெய்து இரண்டாவது ஆண்டை நடாத்திவரும் தங்கட்கு இத்தமிழுலகத்தின்கண்ணுள்ள மாக்களனைவரும் தங்களருந்தவ முயற்சியாலுதித்த தம் பத்திரிகையானது ஆண்டாண்டு மினிது வளர்ந்தோங்கத் தக்க பல சந்தாதாரர்களைச் சேர்த்தும், பல உதவிகளையும் புரிவார்களென்று எல்லாம் வல்ல ஈசன் தண்ணருள் பாலிப்பாரென்று மிறைஞ்சுதும்.

இரஞ்சிதன் வாழி விருத்தம்.

திருவள ருலக மோங்க சென்னையி லுதய மாகி
இருவினைப் பயனீ ததிவிது நலந் தீதி தென்று
பரிவொடு சுட்டி காலப் பருவமுந் தொட்டுங் காட்ட
வருவது மதியி லொன்றாய் வாழி ரஞ்சித பாலா.

சி. ந. முருகைய படையாச்சி,
பட்டமங்கலம், மாயவரம்.

—*—

II

எனதன்பார்ந்த ஐயாவே,

நம் நாட்டில் வந்துகொண்டிருக்கும் மாதாந்த சஞ்சிகைகளை ரஞ்சிதனோடு ஒப்பிட்டுப் பார்த்தால், நம்ரஞ்சிதனைப்போல் அற்புதமான நாவல், புராணம், இதிகாசங்களும்; இன்னும் அறிவையூட்டும் பலவித விஷயங்களும் அடங்கிய மாதாந்த சஞ்சிகை இல்லையென்றே சொல்லலாம். ரஞ்சிதனை வாசிக்க ரஞ்தமாகவே யிருக்கிறது. மேலும் இச்சஞ்சிகை ஓங்கி வளர்ந்துவரும்படி கடவுள் கிருபை செய்வாராக.

வே. கிருஷ்ண பிள்ளை,
திரிகோணமலை, இலங்கை.

இரஞ்சித ரத்ன மாலா

மலர் 5.

1. குழந்தை சிரித்து விளையாடும்போது பலர் அதை எடுத்துக்கொள்ள வருவார்கள். அழுதாலோ ஒருவரும் பக்கத்தில் வரமாட்டார்கள். பணம் இருக்கும்போது 'பலாப்பழத்தில் ஈ மொய்க்கிறது போல்' அநேக சிநேகிதர் கூடிவிடுவார்கள். அப்பொழுது 'என் பாட்டிவீட்டிற்குத் தமையன் மைத்துனருக்குத் தம்பி பேரன்' என்று உறவு கொண்டாட வருவார்கள். கைவறண்டு விட்டாலோ 'சூரியனைக்கண்டபனிபோல' இருந்த இடங்கூடத்தெரியாமல் போய்

விடுவார்கள். அப்பொழுது நெருங்கின பந்துக்கள் கூட 'அவன் யாரோ நான் யாரோ' என்று கூறி விலகிக்கொள்வார்கள்.

2. உலகிலே தப்பெயர் பிரசித்தமாகவேண்டில் ஒன்று கெட்ட வழி, மற்றொன்று நல்லவழி ஆக இரண்டு வழிகளுள்ளன. ராவணனது பெயரும் அப்புக்காத்தானது பெயரும் இன்றும் நிலவிவருகிறது. அதோடு ராமன் பெயரும் கிருஷ்ணன் பெயரும், புத்தர், ம்ஹம்மது ஆதியோர் பெயரும் வழங்கி வருகின்றன. ஒன்று தூஷணையுடனும் மற்றொன்று பூஷணையுடனும் நவிலப்படுகின்றன. இதே முறையில் நமது சந்ததியார்கள் ஒட்வியர், டையர் முதலிய பரோபகாரிகள் பெயரையும், காந்தியாதியவர்கள் பெயரையும் வழங்கி வருவர், ஏழேழு தலைமுறைக்கும் பாபபுண்யம் வரும் என்பது என்னவெனில் சென்றவர்கள் பெயரைக்கொண்டு, அவர்கள் சந்ததியாரை முதல்வனது பெயரைக் குறிப்பிட்டே பேசுவார்கள். பின்வரும் சந்ததியார்களுக்குத் தன் பெயரை ஞாமகப்படுத்துவதின் பலன் இது.

3. உபகாரி, உபகாரி, என்று உலகம் புகழ்வதற்காகத் தர்மம் செய்பவனையும் ஒரு விதத்தில் மேலாகச் சொல்லலாம். ஆனால் யாதொரு தர்மமும் செய்யாமல், மற்றவர் தர்மங்களையும் தடுத்து அபகாரி என்று பட்டம் பெறாமல், கவுரமாய்க் காலங் கழிப்பவர் எத்தன்மை யுபகாரியோ? மேலே வெள்ளி முலாம்பூசிய பாஷாணப் பொம்மைகளே.

4. பழகின சிநேகிதனிடத்திலுங்கூட விளையாட்டாகக் கருதப் படும் பேச்சு சிற்சில சமயங்களில் வினையாக முடிகின்றது.

5. இந்தியவில் அநேகர் தம் பெண்களை யடிமையென நினைக்கிறார்கள். சில சமயங்களில் அவர்களால் நன்மையடையின் அவர்களோடு குலாவியும், மற்ற சமயங்களில் அறவே வெறுத்தும் வருகிறார்கள். அவர்கள் சிறிது குற்றம் செய்யின் அதை வெகு பிரமாதமாகத்தூற்றி அழவைக்கின்றனர். இதுதான் ஆண்தன்மையோ? இக் குணம் என்று நம் இந்தியர்களை விட்டொழியுமோ? கடவுளே அறிவார்.

6. சில மனிதர்கள் தம்மைச் சேர்ந்தவர்கள் கஷ்டப்பட்டு உழைக்கவேண்டும், தாம் மட்டும் சுகமாக உட்கார்ந்துகொண்டு அவ் வருமானத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று நினைப்பவர்கள் இவ்வுலகத்தில் இருக்கிறார்கள். ஆனால் ஏதாவது பேசுங்காலை தன்னாலேதான் தன்னைச் சேர்ந்தவர்கள் பிழைக்கிறார்கள் என்றும், தான் இல்லாவிட்டால் ஒரு காரியமும் நடவாதென்றும் வெட்கமில்லாமல் கூற முன்வந்து விடுகிறார்கள்.

7. ஒருவரிடத்தில் மனப்பூர்வமாய் பிரியம் வைத்து அதை நீக்குவதென்றால் மஹா கடினம். அதே மாதிரி ஒரு பொருள்மேல் ஆசைவைத்து அந்த ஆசையை நீக்குவதும் கடினமாகவே இருக்கிறது. பழக்க வழக்கங்களும் அவ்வாறே.

"பழக்கம் கொடியது கண்டீர் பாறையினும்
கோழி கிழிக்கும்."

8. ஆட்டைக் காட்டிச் சிறுத்தையைப் பிடிப்பது வழக்கம். அஃதேபோல், சிலர் தனக்கொருவனால் காரியம் ஆகவேண்டின் முந்தியே சிறிது உபகாரம்செய்து அன்னோனுடன் சிநேகம் செய்கிறார்கள். காரியம் ஆய்விட்டாலோ பழையவராய் விடுவர். இப்படிச் சிறுத்தை பிடிக்கும் வழக்கம்—இந்த வகை உபகாரம்—எந்தக் கடவுளுக்குப் பிரீதியோ?

9. பெட்பு என்பதைப் பிரித்தால் பெண் - பு என்றாகிறது. பெண்களுக்குரிய குணம் என்பது பொருள். ஆனால் பெட்பு என்பது அழகு என்ற பொருளில் உபயோகப்படுகிறது. பெண்களுக்குரியது அழகு ஆதலின் பெட்பு என்றால் அழகுக்கு ஆயிற்று போலும். பெண்கட்கழகு இயற்கையே.

"மலரினில் நீலவானில் மாதரார் முகத்தி லெல்லாம்
இலகிய அழகை ஈசன் இயற்றினன்." (ஸி. சு. பாரதி.)

10 ஒருவன் கடல் நீரைக் குடித்துவிட்டு அது உப்பு என்று வாய் கொப்பளிக்க அவசரத்தோடு அதே நீரை வாயில் ஊற்றிக் கொண்டானாம், அதுபோல தனித்தமிழ் நடையிலேயே கட்டுரைகள் எழுதவேண்டும் எனக்கூறவந்த ஒருவர் அநேக வடமொழிச் சொற்களைக் கலந்து தமது கூற்றை விளக்கியிருக்கிறார். இதுவும் ஒரு கூத்தே.

கி. வா. ஜெகநாதன், மோகனூர்.

உபதேச ரத்ன மாலா.

(259 ம் பக்கத் தொடர்ச்சி)

மலர் 4. 'ஒருவர் பேசும்பொழுது தடுக்காதே.'

ஒருவர் மற்றொருவருடன் பேசிக்கொண் டிருக்கும்பொழுது நாம் வாய்க்குள் முணுமுணுத்துக் கொண்டாவது அல்லது வேறு விதமான சம்பாஷணைகளை ஆரம்பித்தாவது அவர்களுடைய பேச்சை தடுத்தல் கூடாது. இதனால் அநேக கெடுதல்களும் சண்டைச்சச்சரவுகளும் ஏற்படுகின்றன. உதாரணமாக ஒருவன் ஒரு சங்கத்

தில் உபந்யஸித்துக்கொண் டிருக்கையில் மற்றொருவன் அதற்கு மாறுதலாக வேறு ஒன்றைப்பற்றி தான் எழுந்துநின்று உபந்யஸித்தால் முதலிலுள்ளவனுக்கு எவ்வாறு இருக்கும். ஆதலால் ஒருவர் பேசும்பொழுது தடுத்துப் பேசலும் அனுவசியமாக சங்கதிகள் சொல்லுவதும் கூடாது.

மலர் 5. 'ஊக்கமது கைவிடேல்.'

மேலே கூறிய நீதிவாக்கியத்தை மந்தபுத்தியுடையவர்கள் கெடுதலான அர்த்தம் செய்துகொண்டு, ஒருவருக்கு கெடுதல் செய்ய நினைத்து அது எத்தனைதரம் தவறினாலும் விடாமல் எப்பாடு பட்டாகிலும் கெடுதல் செய்வதை விடுவதில்லை. நல்லவர்களோ தாங்கள் எடுத்துக்கொண்ட நல்லகாரியத்திற்கு எவ்வளவு விக்னம் நேரிட்டாலும் விடாமல் நல்லகாரியங்களைச்செய்து கீர்த்தியை நிலைநிறுத்துகிறார்கள். உதாரணமாக பரம்பரையாகப் பயிரிடும் குடியானவன் பனிரெண்டு வருஷம் மழைபெய்யாமலிருந்தாலும் தான் சாகுபடி செய்வதை நிறுத்தமாட்டான். ஆனால் புதிதாக உழவுத் தொழிலை நடத்தும் ஒருவனோ ஒரு வருஷம் மழை யில்லாவிட்டால் அதைரியமடைந்து மறுவருஷம் சாகுபடி செய்யத் துணியமாட்டான். ஆதலால் ஒருபோதும் 'தைரியமது கைவிடேல்.'

மலர் 6. 'வல்லவனுக்குப் புல்லாயுதம்.'

பெரியோர்கள் தமது காரியங்களை முடிக்க நினைத்தால் கருவிகளின் விசேஷங்களைக் கவனிப்பதில்லை. அவைகள் எதுவா யிருப்பினும் அவைகளைக்கொண்டே தங்கள் காரியங்களை சாதித்துக் கொள்ளுகின்றனர். திறமையில்லாத ஒருவனே தன் கருவிகளைக் குற்றங் கூறுவான். 'ஆடத்தெரியாத தேவடியாளுக்கு கூடங்கோணல்' என்பதுபோல் அவர்களுடைய சாமர்த்தியம் ஒன்றுக்கும் உதவாது. உதாரணமாக ஸ்ரீராமர் சித்திரகூட பர்வதத்தில் வசித்துக்கொண்டிருக்கும்போது தன் மனைவியான சீதாதேவியை ஹிம்சித்த காகரூபங்கொண்ட அசுரனின் உயிரை வாங்க அங்கு கிடந்த ஒரு பிடி புல்லை எடுத்து மந்திரித்து அஸ்திரமாகப் பிரயோகித்தார். அது அவ்வசுரனை துரத்த அவ்வசுரன் எங்கும் சென்று முயன்று கடைசியில் ஸ்ரீராமனையே சரணாகதியடைந்தான். நண்பர்காள்! பாருங்கள், ஓர் பிடி புல் அஸ்திரமானது என்ன விந்தை! ஆதலால் 'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதமாகும்.

மலர் 7. 'நீ கற்ற வித்தையை சங்கத்தில் காட்டாதே'.

காரணமில்லாமல் நீ கற்ற வித்தையை ஒருபொழுதும் காட்டிக் கொள்ளாதே. பெரிய வித்வான்களுக்கும் நீ கற்ற வித்தையை அறிய ஆவலுண்டாகும்படி இரு. இப்படி கௌரவமாய் இருந்தாலல்லது மரியாதை கிட்டாது. ஒரு சங்கத்தில் இருக்கும்பொழுது

அவர்களுக்குத் தெரிந்திருப்பதைவிட உனக்கு அதிகமாகத் தெரிந்திருப்பினும் நீ அப்படி ஒருநாளும் எண்ணுதே. 'யானைக்கும் அடி சறுக்கும்.'

மலர் 8. 'செய்வன திருந்தச் செய்.'

நாம் ஆரம்பிக்கும் எந்தக் காரியத்தையும் பூர்த்தியாக்க வேண்டும். இது முதலில் வெகு கஷ்டமாயிருக்கும். பழகப்பழக இக்குணம் வெகு சுலபமாய் நமக்கு வந்துவிடும். அரைகுறையாக ஒரு காரியத்தைச் செய்து நிறுத்தினுல் பார்த்தவர்கள் பரிகாசம் செய்ய மாட்டார்களா? ஒன்றை அரை கால் செய்து மற்றொன்றை கால் செய்து, எல்லாவற்றையும் அரை குறையாக வைத்துவிட்டு, இன்று ஒருகாரியமாவது முடியவில்லையே ஈச்வரா? என்று ஏங்கிநிற்பதைக் காட்டிலும், குரங்குப்பிடியாய் ஒரு காரியத்தை பிடித்து முடிப்பது தான் மேலான காரியம். ஆதலால் செய்வதை திருத்தமாகச் செய்தல்வேண்டும். உதாரணமாக பல் துலக்குபவன் சுத்தமாக துலக்கியிருந்தால்தான் அவன் சுத்தமாகக் குளிப்பான் மற்ற வேலைகளிலும் சுத்தமாக இருப்பான். (தொடரும்)

சங்கரப்ப ஸ்ரீநிவாஸ், ஓடையனூர்.

ஆலயம் தொழுவது சாலவும் நன்று.

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என ஒளவைப் பிராட்டியார் திருவாய்மலர்ந்தருளியபடி இப்பூவுலகில் மானிடராகிய நமக்கு ஆலயம் தொழுவது இன்றியமையாதது. நம்முடைய முன்னோர்கள் ஒரு ஆலயமென்றும், அந்த ஆலயத்திற்குள் ஓர் சிவலிங்கமென்றும் இன்னும் மற்றதெய்வங்களைப் பிரதிஷ்டை செய்து, பூஜை முதலிய அனுஷ்டானங்களைத் தாங்களும் தங்களுடைய சந்ததியார்களும் அனுஷ்டித்து வரவேண்டுமென்று ஏற்பாடு செய்திருக்கின்றனர்.

தவிர "கோயிலில்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்" எனவும் கூறியிருப்பதனுல், நாம் கோயிலிருக்கிற ஊரில் குடியிருக்கவேண்டுமெனவும், அக்கோயிலிலுள்ள தெய்வத்தை தினந்தோறும் தரிசித்து வரவேண்டுமென்றும் தெரிகிறது.

இக்காலத்திலோ, சிலர், "நாம் ஏன் கோயிலுக்குப் போக வேண்டும்; நாம் தான் கடவுள் என்ற அகங்கிருதியான வார்த்தைகளையும் 'தெய்வம் மனுஷ்யரூபேண; அகம்பிரும் மாஸ்மி' என்னும் பேச்சுகளை விருதாவாக அர்த்தமில்லாமல் பேசியும், அம்மொழி

களைத் தழுவாமலும் இருந்துவருகிறார்கள். கோயிலுக்குப் போகாமல் நாம் ஓரிடத்தில் உட்கார்ந்து நம்முடைய சிந்தையை யடக்கி ஒரு பரம்பொருளாகிய ஜோதியின்மேல் கவனம் செலுத்தினால், கடவுள் பிரத்யக்ஷமாகாமலிருப்பாரோ ? நிச்சயமாக பிரஸன்னமாவார் என்பதற்கு ஐயமில்லை. இதற்கு உதாரணமாக சகூபாய் என்பவள் மிகவும் பகவத் தியானத்தில் ஈடுபட்டிருந்தும், தன் மாமியாருடைய கொடிய உபத்திரவத்தி லுழன்று கஷ்டப்பட்டுக் கொண்டிருக்குங் காலையில், ஓர் நாள் ஒரு பாகவத கோஷ்டி பஜனையுடன் பண்டரிபுரத்தை யடைய வந்திருப்பதாகத் தெரிந்து, தானும் பண்டரிநாதனை தரிசிக்கவேணுமென்ற அவா மிகுதியினால் வீட்டில் இருப்பவர்களிடம் சொல்லாமல் புறப்பட்டுப் போய்விட்டாள். இதையறிந்த கணவன் அவளை மீட்டுக்கொண்டு வந்து, அன்ன ஆகார மில்லாமல் ஓர் தூணில் கட்டிவைக்க ஆக்ஞாபித்து வர, ஓர் நாள் இவள் கஷ்டப்பட்டுக்கொண்டும், பகவத்தியானத்தை விடாமல் துதித்துக்கொண்டுவரவே, பகவான் ஒரு மாது உரு கொண்டு சகூபாயின் முன்னே தோன்றி "உன்னை இப்பொழுது கட்டவிழ்த்து விடுகிறேன். நீ பாகவத கோஷ்டியுடன் சேர்ந்து பண்டரிபுரம் போய்விட்டுவா. உன்னை யாவரும் கண்டு பிடிக்கமாட்டார்கள் உன்னுடைய பரிதாப நிலையைக்கண்டு இப்பொழுது நான் வந்தேன். ஓடிப்போ" என்று சொன்னதும், சகூபாய் பண்டரிபுரம் சென்று தரிசித்து வந்தாள்.

இது எல்லோருக்கும் முடியுமா ? பாக்கியவந்தர்களுக்குத்தான் கிடைக்கும். ஆதலின் நம்போன்றவர்களுக்குக் கோயிலுக்குப் போவது அவசியமென்றும், அவ்விடம் சிறிது நேரமாவது பயபக்தியுடன் கடவுளைத்தியானிக்க வேண்டுமென்றும் அவசியமென்று தெரியவருகிறது. 'செய்வன திருந்தச்செய்' என்பதை அனுசரிக்க வேண்டும். ஒரு காரியத்தைச் செய்யமுயன்றால் அதை வழிதப்பி செய்யலாமா ? சரியான மார்க்கத்தில் போனால்தான் ஒழுங்காக இருக்கும். ஆலயத்திலிருக்கும் ஸ்வாமியை வணங்க வேண்டிய முறைகளைக் குறிப்பிடுவோம்.

1. தினந்தோறும் ஆலயம் சென்று கடவுளை வணங்கவேண்டும். அப்படிக்கில்லாமற் போனால் விசேஷகாலங்களில் தவறாமல் போய் வணங்கவேண்டும்.

2. தரிசனம் செய்வதற்கு முன்னே, புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து, உலர்ந்த வஸ்திரம் தரித்து அவர்களுடைய மதாசாரப்படி நித்தியகர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு செல்ல வேண்டும். ஈரவஸ்திரத்துடன் தெரிசிக்கலாகாது.

3. ஆலயத்திற்குப் போகும்பொழுது வெறும் கையுடன் போகக்கூடாது. தேங்காய், பழம், பாக்கு, வெற்றிலை முதலிய

வைகளுடன் போதல் அவசியம். முடியாதவர்கள் பத்திரபுஷ்பங்களோடு போகவேண்டும். அதுவும் முடியாதவாகள் கோயிலிலிருக்கும் குப்பை செத்தை முதலியவற்றை எடுத்தெறிந்துவிட்டு தரிசித்தல் வேண்டும்.

4. முதலில் கோபுரத்தை வணங்கி, பிறகு உட்சென்று பலிபீடத்திற்கு இப்பால் அவரவர்களுக்கு உரித்தான நமஸ்காரத்தைச் செய்தல் வேண்டும்.

5. புருடர்கள் அஷ்டாங்க நமஸ்காரமும் அதாவது நம்தேகத்தினுடைய எட்டு உறுப்புகளும் (தலை, கையிரண்டு, செவியிரண்டு, மோவாய், புயங்களிரண்டு) நிலத்திலே படும்படி வணங்குதல்.

பெண்டிர்கள் பஞ்சாங்க நமஸ்காரம் செய்ப வேண்டியது. அதாவது தலை, கைகளிரண்டு, முழந்தாளிரண்டு என்னும் ஐந்து உறுப்புகள் நிலத்தில் படும்படி நமஸ்கரித்தல். திரியாங்க நமஸ்காரம் (கைகளை சிரசின்மேல்வைத்து குவித்தல்) இருவர்களுக்கும் பொதுவானது.

6. நமஸ்காரம் மூன்றுதரத்திற்கு குறையாமல் செய்யவேண்டும். அப்படிச்செய்யும் பொழுது மிக பயபக்தியுடன், மார்பு பூமியிலே பொருந்தும்படி வலக்கையை முன்னும், இடக்கையை பின்னும் நேரே நீட்டி, பின் அதுபோலவே மடக்கி, வலப்புயமும் இடப்புயமும் மண்ணிலேபடும்படி நீட்டி, வலக்காதை முன்னும் இடக்காதைப் பின்னும் மண்ணிலே பொருந்தும்படி செய்து நமஸ்கரிக்க வேண்டும். இப்படியே ஒவ்வொருவரும் அநுசரிக்கவேண்டும்.

7. பிறகு எழுந்து நல்ல சிந்தையோடு பிரதக்ஷணம் செய்தல் வேண்டும், அவரவர்களுக்கு இருக்கும் அவகாசத்தைப்போல் சாதாரணமாக நாம் செய்யும் பிரதக்ஷணமும் அடிப்பிரதக்ஷணமும் அங்கப்பிரதக்ஷமும் செய்யவேண்டும். மூன்றுதரத்திற்குக் குறையாமல் செய்யவேண்டும்.

8. பிரதக்ஷணம் செய்யும் காலத்தில் நம்முடைய கவனத்தை பிறரிடத்திலும் பிறவிடத்திலும் செலுத்தாமல், கடவுளின்பேரிலேயே கண்ணும் கருத்துமாக இருத்தல்வேண்டும்.

9. அபிஷேகம் நடக்குங்காலத்திலே உட்பிரகாரத்தில் பிரதக்ஷண நமஸ்காரம் முதலியவை செய்யலாகாது.

10. சந்நிதானத்தில் நமஸ்காரம் முதலியவைகளைச் செய்த பிறகு, உள்ளேபோய் கடவுளை தியானித்து அஞ்சலிசெய்து தோத்திரங்கள் சொல்ல வேண்டும். அப்படிச் செய்யுங் காலத்து நம்முடைய தேகம் சிலிர்க்க, மனம் உருக, கண்களில் ஆனந்தபாஷ்பம் வர நாம் கடவுளிடத்தில் ஈடுபட்டுவிடுவோம்.

11. அருச்சகர்களைக் கொண்டு அர்ச்சனைகள் செய்விக்கச் சொல்லி, தேங்காய் பழம் முதலியவைகளை கடவுளுக்கு நிவேதனம் செய்து, கற்பூரஹாரத்தி செய்தபிறகு, கடவுளை தியானித்து, அருச்சர்களுக்கு தக்ஷிணை கொடுத்தல் வேண்டும்.

12. விபூதி, புஷ்ப, குங்கும பிரசாதங்களை வலது கையில் மரியாதையாக வாங்கிக்கொண்டு அவைகளை இடதுகையில் மாற்றிக் கொள்ளாமல் வலது கையாலேயே தரித்துக்கொள்ளவேண்டியது.

13. வீட்டிற்குத்திரும்பும் காலத்தில், பலிபீடத்திற்கு முன்னிருக்கும் நந்தியினிடத்திலோ அல்லது வேறு வாகனத்தினிடத்திலோ உத்திரவு பெற்றுச் செல்லும் பாவனையாக நந்தியை தரிசித்து விட்டுச் செல்லவேண்டும்.

தற்காலத்தில் கோயிலிலேசெய்யும் அக்ரமச்செயல்களை அறவே ஒழிக்கவேண்டும். ஆசாரமில்லாது போதல், கோயிலுக்குள் மலஜலங்களைக்கழித்தல், சூதாடுதல், மயிர் கோதிமுடித்தல், பாதரட்சையிட்டுக்கொள்ளுதல், தலையில் வேஷ்டி தரித்துக்கொண்டு போதல், நிர்மாலபத்தை மிதித்தலும் தீண்டுதலும் பெண்களைத் தீண்டுதலும் இச்சித்தலும் பார்த்தலும் முதலான அக்ரமசெயல்களை ஒழிக்கவேண்டும்.

சிவபுண்ணிய க்ஷேத்திரங்களில் சில ஜனங்கள் கடவுளைத் தரிசிக்கப் போவதாகச்சென்று அங்கே சிற்றின்ப பிரியராகி க்ஷேத்திரத்தின் மகிமையையும் கெடுத்து தங்களும் தங்கள் வாழ்நாளை வீணே சிலவழித்து. மறுமையில் மோக்ஷ சாம்பிராஜ்யத்தை அடைய வேண்டி, காலத்தை சரியாகக் கழித்துவர ஒவ்வொருவரும் முயற்சி செய்யவேண்டும். கடவுள் ஒவ்வொருவருக்கும் நல்ல புத்தியையும் எண்ணத்தையும் கொடுப்பாராக. சுபம்! சுபம்!! சுபம்!!!

S. N. கோபால கிருஷ்ணய்யர்,
உபாத்தியாயர், பொங்கலூர்.

தர்மம்.

(279-ம் பக்கத் தொடர்ச்சி.

யாதானு மொருவன் தர்மம் செய்வானாயின் அது அவனுடைய ஈரேழு பதினான்கு ஜன்மங்களிலும் உடனின்று காக்கும். தன்னால் பணத்தால் மற்றெதுவாலும் தர்மம் செய்யமுடியாவிடினும் சரீரத்தாலாவது உதவிசெய்தல் வேண்டும்,

'பரோபகா ரார்த்தம் ஹிதம் சரீரம்'

ஆதலால் தன்னிடம் வரும் யாசகர்களை இன்சொல்லாலும் மலர்முகத்தாலும் குளிரச்செய்து ஏதோ தன்னாலியன்றவரை ஈதலே பேருபகாரமாகும்.

“ அதிதிர்பாலகச்சைவஸ்திரீஜநோநிருபதிஸ்ததா,
ஏதேவித்தம்நஜானந்திஜாமாதாசைவபஞ்சமஹா.”

(தாத்) அதிதியும், சிறுவனும், ஸ்திரீயும், ராஜாவும், மருமகனும் ஆகிய இவ்வைவரும் இருப்பதும் இல்லாமையும் அறியமாட்டார்கள். அதற்காக அவர்களை கோபித்தல் கூடாது. எப்போதும் கோபம் என்பதே கூடாது. கோபத்தை ஒழிப்பதே பெரிய அறமாகும். நேரக்கூடிய கெடுதல்களுக்கெல்லாம் கோபமே காரணம். ஆதலால் கோபத்தைத் தவிர்த்தலே நன்று.

தவிர தரித்திரர்களுக்குக் கொடுக்கும் தானம் சிரேஷ்டமானது இதனாலேயே:

“ தரித்ரரய க்ருதம் தானம் சூன்யலிங்கஸ்ய பூஜினம்,
அநாதப்ரேதம் ஸம்ஸ்க்காரம் அச்வமேத சமம்விதுஹு”

(தாத்.) தரித்திரனுக்குக் கொடுக்கும் தானமும், பூஜையில்லாக் கோயிலுக்குப் பூஜையுண்டாக்குதலும் அநாதையான ப்ரேதத்தை எடுத்துக் கொளுத்துதலும் அசுவமேதம் செய்ததற்கு ஒப்பாகும் என்று நீதி சாஸ்திரங்கள் முறையிடுகின்றன.

அப்படியில்லாமலும், தானும் உண்ணாமலும் பிறர்க்கும் கொடாமலும் போனால் மறு ஜன்மத்தில் தரித்திரனாவான்.

“ அனாத தோஷேண பவே தரித்ரோ தாரித்ர தோஷேண கரோதி பாபம்
பாபாத வச்யம் நரகம் ப்ரயாதி புனர்த்தரித்ரப் புனரேவ பாபீ.”

(தாத்) ஒருவன் முற்பிறப்பில் ஒருவருக்கும் கொடாததோஷத்தால் தரித்ரனாகிறான். அந்த தாரித்ரியத்தால் பாபம் செய்கிறான். அந்த பாபத்தால் நரகம் ஏற்படுகிறது. கொஞ்சகாலம் நரகத்தை அநுபவித்து மறுபடியும் தரித்ரனாகப் பிறந்து இப்படியே துன்பப்படுகிறான்.

சகோதரர்களே! பாருங்கள்! பரிதாபம்!! பரிதாபம்!!! இப்படியும் மூடர்களிருக்கின்றனர். எப்போதும் தர்மம் தலைகாக்கும் என்பதை உணராமல் மோசம் போகின்றனர். ‘தர்மம் தலைகாக்கும்’ என்பதற்கு உதாரணமாக ஒரு கதை சொல்லுவோம்.

ஓர் ஊரில் பிராமணனொருவன் இருந்தான். அவனுக்கு ஏராளமான சொத்துகள் நிறைந்திருந்தும் ஒருநாளாவது தர்மம் செய்தறியான். யார் வந்து என்ன கேட்டாலும், ‘அதோ அவ்வீட்டிற்குப் போ’ என்று தன்விரலால் சுட்டிக் காட்டிக்கொண்டிருப்பான். இப்படியிருக்கும்போது இப்பிராமணனுக்கு மரணகாலம் சமீபித்துவிட்டது. எமகிங்கரர்கள் இவனுயிரை இழுத்துக்கொண்டுசென்று தர்மம் செய்யாத பாபியானதால் செக்கில் தலைகீழாகப்போட்டு அரைத்தார்கள். அப்போது செக்கு படாலென்று வெடித்தது. என்ன

வென்று அவர்கள் பார்க்கும்போது அவனுடைய விரலானது தர்மம் செய்திருக்கிறபடியால் அவனை அவ்வாபத்தினின்றும் நீக்கியது.

நண்பர்களே! பார்த்தீர்களா இவ்வற்புதத்தை? விரலினுல் சுட்டிக் காட்டியதற்கே இவனை இவ்வாபத்தினின்றும் விலக்கியதே. இன்னும் பெரிய உபகாரங்கள் செய்தால் எவ்வளவு நல்லது என்பதை இதனாலேயே யோசித்துக் கொள்ளுங்கள். மாந்தர் குடிவாழ்க்கை நிலையற்றது என்று முன்னமேயே கூறப்பட்டது. தவிர, '.இரவிலோ பகலிலோ மத்தியானத்திலோ' நம்முயிரைக் கவர பாசக்கயிற்றுடன் எமகிங்கரர்கள் காத்துக்கொண்டிருக்கின்றனர்.

" அநித்யானி சரீராணி விபவோநைவ சாச்வதஹ,
நித்யம் சந்நிஹிதோ மிருத்யுஹு கர்த்தவ்யம் தாம்சங்க்ரகஹ"

(தாத்) சரீரம் அநித்யம். சம்பத்து சாச்வதமன்று. மிருத்யுவானவன் எப்போதும் சமீபத்திலேயே யிருக்கிறுன். ஆதலால் தர்மங்களேயே செய்யவேண்டுமென்று வேதநூல்கள் முறையிடுகின்றன.

ஆதலால் நண்பர்காள்! எல்லோரும் மனமுவந்து ஏழை எளியோர்களுக்கு 'ஐயோ கைப்பணம் செலவழிந்து போகிறதே' என்று பாராமல் தானதருமங்கள்செய்து மோக்ஷசாம்ப்ராஜ்பத்தை அடைய வழிபாருங்கள்.

தர்மமே ஜயம்.

" சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின்—மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கி லுள்ள படி" (ஔவையார்)

" புன்னுனிமேல் நீர்போல் நிலையாமை என்றெண்ணி
இன்னினியே செய்க அறவினை—இன்னினியே
நின்றான் இருந்தான் கிடந்தான்தன் கேளலற
சென்றான் எனப்படுத லான்" (நாலடியார்)

" தன்மமது செயல்வேண்டும் தண்டலைநீள்
நெறியாரே தயவுசெய்வீர்
வன்மவினை செயல்வேண்டாம் பொய்வேண்டாம்
பிறரையொன்றும் வருத்தல்வேண்டாம்
கன்மநெறி வரல்வேண்டாம் வேண்டுவது
பலர்க்கு முபகாரமாகும்
நன்மைசெய்தார் நலம்பெறுவர் தீமைசெய்தார்
தீமைபெற்று நலிவர்தாமே"—(தண்டலையார்சதகம்)

" தானமது விரும்பு" " அறனை மறவேல்"

சுபம்! சுபம்!! சுபம்!!!

தண்டமிழ்த் தொண்டன்.

அன்னதானம்.

அன்ன தானம், வஸ்திர தானம், சொர்ன தானம், வித்தியா தானம், கன்னிகாதானம், பூதானம், கோதானம் முதலான அநேக தானங்களிலும் அன்னதானமே மேலானதென் றுரைக்கத் தகும். ஆனுல் அன்னதானஞ் ஜீரணம், வித்தியாதானம் அஜீரண மென்கிற வாக்கிய மிருந்தபோதிலும் பரம சாதுக்களுக்கும் ஏழை பாமரர்களுக்கும் அன்னம் படைப்பவர்களுக்கு அழியாப்பதம் கிடைக்கும் என்பதற்கோர் தடையுமில்லை. ஆதலால்,

"ஒப்புடன் முகமலர்ந்தே யுபசரித் துண்மை பேசி
உப்பிலாக் கூழிட்டாலு முண்பதே யமிர்த மாகும்
முப்பழமொடு பாலன்னம் முகங்கடுத் திடுவா ராயின்
கப்பிய பசியி னூடே கடும்பசி யாகுந் தானே"

என்பதற்கொப்ப அன்புடன் அன்னமளிப்பதே பெரும் புண்ணியமாகும். அவ்வாறு தன்னிடம் வந்து யாசிப்பவர்களுக்கு தன்னிடம்மில்லாவிடினும் அன்னமளிக்கு மிடத்தைக் காட்டினபோதிலும் பெரும் புண்ணியங் கிட்டுமென்பதற்கு சந்தேகமில்லை. இதற்கு ஒரு திருஷ்டாந்தம் கூறுவோம்.

பாரதயுத்தத்தில் அர்ச்சுனனுல் விடப்பட்ட பாணங்களால் களையடைந்து தன் ரதத்தின் ஸ்தம்பத்தின்மேற் சாய்ந்து, அரிபரந்தாமனை துதிக்கும் கர்னன், பார்த்திபனுக்கு தர்மராஜனைப்போல் தோன்ற, அத்தருணத்தில் கிருஷ்ணபரமாத்மா கவசகுண்டலன் செய்த தருமத்தை எல்லாம் கவர்ந்து கொள்ளக்கருதி ஒரந்தணன் போல் சென்று சொர்ண குண்டலனை யாசிக்க, கவசகுண்டலன் ஓ பிராமணோத்தமா இந்த அந்தியகாலத்தில் இல்லை என்ற வாக்கை நானுரைக்காமல் என்னிடமுள்ள வஸ்து ஏதானுலுங் கேட்டு வாங்கி கொள்ளுமென, கண்ணன், ஓ கர்ணனே! உன்னிடத்திலுள்ள வஸ்துவையே நான்கோரி வந்தேனென கவசகுண்டலன் களிப்புற்று என்னுயிர் வேண்டு மென்றாலும் கொடுக்கச் சித்தமா யிருக்கிறேனென் றறைந்தவுடன் உன்னுயிர் எனக்கு வேண்டியதில்லை. உன்னுயிருக்குதவியாக நீ செய்துவந்த தர்மமனைத்தையும் எனக் களிப்பாயென கவசகுண்டலன் களிப்புற்று பிராமணோத்மா நீராசித்த தருமத்தை தத்தஞ்செய்வேன் என் களை நீங்க ஜலம் கொண்டு வந்தூட்டுமென பகவானப்படியே கவசகுண்டலனை கரத்தை நீட்டெனப் பகர்ந்து ஜலத்தை ஊற்றினவுடன் பொன்மயமானதைக் கண்ணுற்ற கர்னன் அதிசயித்து ஆயாசமேலிடுகின்றதெனப் பணிய பகவான் நீ செய்ததெல்லாம் சொர்னமானதால் நீ தொட்டதெல்லாம் பொன்மயமாகின்றது. அன்னதானமொருகாலத்திலும் செய்யவில்லையோ வென ஆனுலொரு காலத்தில் ஒரந்தணன் என்னை போஜனங் கேட்டார்

நான் அதோ தர்மராஜன் அன்னதானஞ் செய்கிறார் அவ்விடம்போமென 'சுட்டு விரலாற் காட்டினதுண்டென் றுரைத்தான். பகவான் அப்படியானல் அன்னதான இடத்தைக் காட்டினவிரலை உன்வாயில் வைப்பாயானல் ஜலம்பெருகி உன்தாகத்தைத் தணிக்குமென்றுரைத்தார். அவ்வாறே கவசகுண்டலன் வாயில் விரலைவைத்த மாத்திரத்தில் ஜலம்பெருகி தாகம் தணிந்தது. பின்பு கர்னன் அப்பூசுரருக்கு தருமத்தைத் தத்தஞ்செய்து பகவானைக்கண்டு களித்தார். ஆகையால் அன்னதானபலனுக்கு எதுவுமீடாகாது. முற்பிறப்பில் பசி என்று வந்தவர்களுக்கு அன்னமளிக்காதவர்களே இப்பிறப்பில் தரித்திரர்களாகி ஒரு வேளை அன்னத்துக்கு கஷ்டப்படுகிறதை நாம் நேராகவே காண்கிறோம். தவிர பாரதத்தில் முறையிடுகின்றமையாலும், கவிவாணர்கள் பிரசங்கிக்குங்கால் கேட்டமிருக்கின்றபடியினலும் இங்ஙனம் விரிவஞ்சி விடுத்தனம். ஸ்ரீ பரமாத்மா நமக்கும் நம் ரஞ்சிதனுக்கும் நீடிய ஆயுளை அளிப்பாராக. சுபம்! சுபம்!! சுபம்!!!

வை. முத்தையா பிள்ளை,
பிராஞ்சுகாரன் தோட்டம், இலங்கை.

சங்குபாலகன்,

6-ம் அத்தியாயம்.

திருமணம்.

(276-ம் பக்கத் தொடர்ச்சி.)

வீசின பூமாலை நேராய்ப்போய்க் கடைசியில் ஒரு பக்கம் உட்கார்ந்திருந்த சங்குபாலகன் கழுத்தில் விழுந்தது, அதைக்கண்டு எல்லா மன்னர்களும் திகைத்து "நமக்குப் பாக்கியமில்லை, என்ன செய்வது" என்று ஒவ்வொருவரும் எண்ணிக்கொண்டு அவரவர் நாடுகளுக்குப் புறப்பட்டுவிட்டனர். உமபபுரி மன்னன், "இத்தனை மன்னர்களையெல்லாம்விட்டு நாற்றமெடுத்த புண்களையுடைய ஒருவன் கழுத்தில் மாலை விழுந்ததே" என்றும் "இவ்விதமானதால் பல மன்னர்களுக்கும் நகைப்புக் கிடமாச்சுதே" என்றும் துக்கித்துத் தன் மகளின்மீது சினங்கொண்டு, "நீ உன் கணவனை யழைத்துக் கொண்டு எங்காவது சென்றுவிடுவாய்" என்க் கட்டளையிட்டான். அவளுடைய உடன்பிறந்தார்களும் அவளை விரட்டத்தொடங்கினர்.

"குலம்வேண்டு மென்றிருப்பர் குலத்துளார்
கல்வியினற் குறையா ஞானப்
பலம்வேண்டு மென்றிருப்பர் தந்தைமார்
பரந்தபெருஞ் செல்வமுள்ள

தலம்வேண்டு மென்றிருப்பர் தாய்மார்கள்
யௌவனமும் அழகுஞ் சார்ந்த
நலம்வேண்டு மென்றிருப்பார் நாறுகுழன்
நங்கைமார் நலத்தின் மிக்கார்''

என்றபடி சுற்றத்தார் நல்ல குலமகனையும், தந்தை கல்வியுள்ளவனையும், தாய் மிக்க செல்வமுள்ளவனையும், பெண்கள் வாலிபமும் அழகும் பொருந்திய கணவனையும் விரும்புவார்களன்றோ? மேற் கண்டவைகளெல்லாம் சங்குபாலகனிடத்து இல்லாதிருப்பதுபோல் தோன்றியதனாலேயே உமயாபுரி மன்னனும் அவன் புதல்வர்களும் இவ்விருவரையும் வெறுத்து விரட்டினர். ஆனால் மன்னன் மகளுக்கு அவள் எண்ணம்போல அழகுள்ள கணவன் வெளிக்கு மாத்திரம் அழகற்றவன் கிடைத்ததனால் அவள் சங்குபாலகனின் மேல் காதல் கொண்டாள். "கைநிறைந்த தனத்தினும் கண் நிறைந்த கணவனே மேல்'' அன்றோ? மன்னன் மகள் உடனே தன் கணவனை யழைத்துக்கொண்டு உமயாபுரிப் பட்டினத்தினெல்லையிலிருந்த ஒரு பிள்ளையார் கோவில் போய்ச்சேர்ந்து அங்கு வாழ்ந்து வந்தனர்.

ஆறும் அத்தியாயம் முற்றிற்று.

7-ம் அத்தியாயம்.

வேட்டையாடுதல்.

சங்குபாலகனும் அவன் மனைவியுமாகச் சிறிது காலம் பிள்ளையார் கோவிலில் வாழ்ந்து வருநாளில், ஒரு நாள் உமயாபுரிமன்னனும் அவனது புதல்வர்கள் ஆறுபேருமாய் வேட்டையாடுதற்கு அடவியை நோக்கிச் சென்றனர். இதையறிந்த நம் சங்குபாலகனும் மனைவியினிடம் விடைபெற்றுத் தானும் வேட்டைக்குப் புறப்பட்டுச் சிவாலயத்திலிருந்த புரவியொன்றில் ஏறிக்கொண்டு சென்றான். காட்டிற்குள்சென்று கொண்டிருக்கையில் முன்னால் ஒரு குளம் புலப்பட்டது. பசியாயிருந்ததால் அக்குளத்தில் நீராடிப் பூசை முடித்து உண்டிகொண்டு சிறிது களைப்பாறி அக்காட்டி லிருக்கும் பிராணிகளெல்லாம் தன்னிடம் வரும்படி நினைத்தான். அவ்விதமே நடப்பனவற்றில் சிங்கம், புலி, கரடி, மான், முயல், பன்றி முதலிய ஜீவகளும், ஊர்வனவற்றில் பாம்பு முதலியவைகளும், பறப்பனவற்றில் அன்னம், மயில், குயில், கிளி, புறா முதலிய பலவகைப் பிராணிகளும் அங்குவந்து சேர்ந்தன.

உமயாபுரி மன்னனும் அவனுடைய புதல்வர்களும் அவ்வடவி முழுதும் அலைந்து பார்த்தும் ஒரு சிறு குருவிகூடக் கிடைக்காமல் களைப்புற்றுத் தாகமதிகரித்ததால் சங்குபாலகனிருந்த அக்குளத்திற்கு வந்தபொழுது அங்கு தேவர்களுக்கு ஒப்பான அழகிய மேனி

யுடன் ஒருவர் அமர்ந்திருப்பதையும் அவரைச்சுற்றி பலவகைப் பட்ட பிராணிகளிருந்ததையும் கண்டனர். அவர் நம் சங்குபால கனே என்பதை வாசர்களுக்குக் கூறவேண்டியதில்லை. அவன் தன் ஒணுன் தோலேக் கழற்றியிருந்ததனுல் அவனுடைய உண்மை யான அழகுடன் காணப்பட்டான். இவனிருந்த அழகை இவ்வும மையாபுரி மன்னனறிந்து தன் குலதெய்வமே இங்கு வந்தமர்ந்திருக் கிறதென எண்ணிக்கொண்டு அவனைக் கைகூப்பித்தொழுது, "என் குலதெய்வமே! தங்களைக் காணும் பாக்கியம் எங்களுக்குக் கிட்டி யது எவர் செய்த நல்லறமோ? இன்று எங்களுக்கு வேட்டையில் ஒன்றும் அகப்படவில்லை. எல்லாப்பிராணிகளும் தங்களிடம் வந்து விட்டன. சுவாமி! எங்களுக்குச் சில பிராணிகளைத் தயைகூர்ந்து அளிக்கவேண்டும்" என வேண்டி நின்றுன். (தொடரும்).

அ. ச அருணுசலேஸ்வரர்,
ரூவான்வெல்ல, இலங்கை.

காதலால் துக்கமுண்டு ஈஸ்வரியால் நன்மையடைந்த

சாந்தவதி

பெண்:—எனக்காக வேணு மென்று ஒத்தாசை செய்ய வந் திருக்கின்றுய்.

வந்தவள்:—அவ்விதமில்லை. நானிந்த அமாவீகமென்ற அரண் மனையில் ஓர் மனிதரிடம் அவசர காரியமான ஓர் விஷயத்தை முன் னிட்டு வந்தேனல்லது தங்களைக் குறிப்பிட்டு வந்தவளல்ல.

பெண்:—என்னை முன்னிட்டு நீ வரவில்லை யென்பது நியாயம், ஆனுல் நீ இங்கு வரவேண்டிய காரணமென்ன?

வந்தவள்:—நான்மேற்சொன்ன மனிதரை உத்தேசித்து வருஞ் சமயம் தங்களை இவ்விடத்தில் பார்க்கலானேன். நீங்கள் ஏதோ கவலையினுல் சோகமுற்று துன்பப்படுவதாய்ப்புலப்பட்டது. கூர்ந்து கவனித்தேன். முகத்திலும் அருள் நீங்கி இருள் சூழ்ந்து நின்றதை யோசிக்க வெகு நாளாய் துக்கசாகரத்தில் ஈடுபட்டிருக்கிறீர்க ளென்பது நன்கு தெரிந்துகொண்டேன். கண்ணீரானது தாரை தாரையாக வடிய வாய் பிதற்றுதலும் அழுகையுமாயிருந்ததினுல் ஒருவரைப்பிரிந்து அவருடைய பிரிவாற்றுமல் மனஞ்சிதறுண்டு வாடு வதா யென்மதிக் கெட்டியது அடிக்கடி நாற்புறங்களிலும் வெறிக்க பார்த்து திடுக்கிட்டு பயந்ததினுல் ஒருவருடைய கைக்குள் சிக்கி தப்ப வழியின்றி சிறைக்குள் சார்ந்து அவஸ்தைப்படுவதாயும்வேறு யாருந்துணையில்லை யென்று தோன்றியபடியால் என்னுலியன்ற ஒருபகாரத்தை தங்களுக்குச் செய்யவேணுமென்றும் என்ன இம்

சைகள் வந்தாலும் பின்வாங்காமல் பிரயாசை யெடுத்து கூடியவரை தங்களை அணுகி வார்த்தையாடவும் மேற்சொன்ன விஷயத்தைத் தெரிவித்து அதற்காகவேண்டிய வழியைத் தேடவே இங்கு வந்தே னல்லது வேறுவிதமான வயணத்தைக்கொண்டு வந்தவளல்ல.

பெண்:—என்ன ? நீ சொல்வதையெல்லாம் பார்க்க மிகுந்த வியப்பைத் தருவதுடன் சந்தேகத்திற்கும் இடமுண்டாகிறது. ஏனெனில் என்னை நீ இதற்கு முன் எப்பொழுதாவது பார்த்திருக்கின்றாயா? எவ்வகையில் உதவி புரியவேணுமென்று வந்தாய்? ஒரு வழியு மில்லாதிருக்க வெகு அக்கரையாய்ப் பிரயாசையெடுத்து கொள்ளவேண்டிய காரண மென்ன ? இவ்வளவு தூரம் முயற்சியெடுத்து என்னை கார்க்கவேணுமேன்று உனக்கேற்பட்ட இரக்கந்தான் யாதோ? முன்னால் நேரிலிருந்து பார்த்ததுபோல் என் தற்கால நிலைமைகளை யெல்லாம் சொல்லுகிறாய். இந்த இடத்திலே யாராயிருந்தாலும் சாமான்யமாய் வரமுடியாது அதிலும் நந்தவனமோ நாலுபுறங்களிலும் உயரமான சுவரெழுப்பி கட்டப்பட்டிருப்பதுடன் பின்புறத்திலும் யமுனாநதி ஓடிக்கொண்டிருக்கிறது. இந்தவனமும் இருள் சூழ்ந்த மகா பெரியது. இதற்கு இரண்டு பக்கங்களையன்னியில் வேறுவழிகிடையாது. இதன் வாசல் கார்ப்பவர்களும் நந்தவன உள் காவலாளிகளும் பரமசண்டாளர்கள் இவர்களை யறியாமலும் மற்ற எவ்வகையிலும் இங்குவருவது பெருங் கஷ்டமாகும். சந்திகாலமான இன்னேரத்தில் தனித்து என்னிடம் வருவதற்கு என்னநியாயமிருக்கிறது. இவைகளையெல்லாம் யோசிக்க யாருடைய துர்போதனையின்பேரிலோ அல்லது யேவுதலின்பேரிலோ இங்குற்றா யென்பது நன்கு விளங்குகின்றது.

வந்தவள்.—அம்மா ! நீங்கள் நினைப்பதுபோல் ஒருவருடைய அனுமதியின்பேரில் வந்தேனென்பது உண்மையே. ஆனால் தங்களைக்குறிப்பிட்டு வந்தவளல்ல. முன்சொன்ன மனிதரைக்குறித்ததே அதுவும் பின்னால் வர வர அநுபோகத்தில் தெரிந்து கொள்வீர்கள். அம்மனிதருடைய விஷயங்களைப்பற்றி இப்பொழுது கேட்காமலிருக்கும்படி தயவாகக்கேட்டுக்கொள்ளுகிறேன். சந்திகாலமான இந்நேரத்தில் இங்குவருவது கூடாதகாரியந்தான் அப்படி வந்ததற்கு அநேகம் நியாயஙகளிருக்கிறது. அதைப் பின்னால் தெரிவிக்கிறேன. இப்பொழுது தெரிவிப்பது அவ்வளவு உசிதமல்ல. எதினாலென்றால் பகல்சேதி பார்த்துப்பேசு. இராச்சேதி அதானுஞ் சொல்லாதே என்று முன்னோர்கள் வாக்கியம். அதை அனுசரிக்கவேண்டுவது முக்கியம். இந்த நந்தவனத்தினுள் பிரவேசிப்பது சாமான்யமில்லைதான். என்னை யன்னியில் வேறொருவர் வருவதென்றால் பெருங் கஷ்டமாகும். ஆனால் நான் வருவதற்கு அந்தரங்கவழி யொன்றிருக்கிறது. அவற்றையும் இன்னம் சற்று நேரத்தில் காண்பிக்கிறேன்

என்னை உனக்கு முன் தெரியாமலிருக்க யெந்தவகையில் ஒத்தாசை செய்ய வந்தாயென்றும் அப்படி உனக்கேற்பட்ட அக்கரை யேதென்றும் ஒருவருடைய தூண்டுதலின்பேரில் தமக்கு நான் கெடுதி செய்ய வந்திருப்பதாய் தெரிவித்தீர்கள். அவ்விதம் நீங்கள் நினைப்பது தப்பாகும். எதார்த்தமாகவே என்னால் கூடுமானவரை யில் பிரயாசை யெடுத்து ஒத்தாசை செய்கிறேனென்று சொன்னே னல்லது மனதில் கபடம் வைத்து சொன்னவளல்ல. மேற்சொல்லி வந்தபடிக்கே யின்னமும் என்னாலான முயற்சியுடன் உபகாரஞ் செய்வதாய் தெரிவித்துக் கொள்ளுகிறேன் தங்களுடைய தற்காலநிலை மையை நான் சொன்னதிலிருந்து ஒருவர் சொல்லாவிட்டால் இவ ளுக்கு எப்படி தெரியக் கூடுமென்று சந்தேகங் கொண்டிருக்கிறீர் கள். அதுவும் உலகயியற்கையே. தாங்கள் நினைப்பதுபோல் ஒருவர் சொல்ல தெரிந்துகொண்டேனென்று கருதவேண்டாம். சற்றுமுன் நீங்கள் துக்கப்பட்டதினாலும் முகக்குறிப்பினாலும் தெரிந்து கொண் டேனல்லது வேறுவகையாலென்று யோசிக்கவேண்டாம்.

பெண்:—நீ என்னிடம் வந்து கொஞ்ச நாழிகைகூட ஆகவில்லை. அதிலும் இப்பொழுதோ யிராக்காலம். இதில் எவ்வழியில் ஒருவரு டைய செய்கையை கண்டு கொள்ளமுடியும் ஆனால் சற்றுமுன் கண் டேனென்பதாய் தெரிவிக்கின்றாய். எவ்விடத்தில் என்னை கண்டாய் அப்படி வந்து நாழிகையாகிவிட்ட தென்றாலும் இதுவரையில் எங் கிருந்தாய்? தெரிந்த நிமிஷமே உதவிசெய்ய வேணுமென்ற கருத் துள்ளவள் என்னிடம் வந்திருக்கலாம். அவ்விதம் வந்தவளாகவுந் தெரியவில்லை. நீ சொல்லி வரும் வார்த்தைகளிலிருந்து மேலும் மேலும் சந்தேகத்திற்கே இடமுண்டாகிறது.

(இன்னும் வரும்),

நா. சுப. சாமினாத உபாத்தியாயர்,

பக்தகவி ஜோதிடர், மாந்தலே, பர்மா.

அறிவை விருத்திசெய்யும் இனிய தமிழ் நாவல்கள்.

சுந்தர்சிங்	1	8	0	விவேகாநந்தன்	1	4	0	வசிகரன்	0	12	0
மோகன்சிங்	1	4	0	தயாபரசுந்தரி	0	12	0	கமலவல்லி	0	12	0
சித்ரரேகை	1	8	0	கற்பகவல்லி	0	12	0	தர்மாம்பாள்	1	12	0
தனபாலன்	2	0	0	ஞானசுந்தரன்	0	12	0	கிருபாம்பாள்	0	8	0
பத்மநாபன்	0	14	0	சௌந்தராபாய்	1	0	0	அம்புஜாக்ஷி	2	0	0

குறிப்பு. மேற்கண்ட நாவல்கள் வேண்டுவோர் விலையை முன்னதாக அனுப்பி னால் தபால் சார்ஜ் இனாமாக அனுப்பப்படும். இன்றே எழுதுங்கள்.

விலாசம்: ஸோமநாத் & கோ.,

2/15, பெருமாள்கோவில் தோட்டத் தெரு முதல் சந்து,

சௌகார்பேட்டை போஸ்டு, சென்னை.

மிருகாவதி.

(239-ம் பக்கத் தொடர்ச்சி)

வஸந்தன்:—ஆனாலும் இந்திரனுக்கு கொடுந்தண்டனைதான் சந்திரன் குருபத்தினி தாராதேவியைக் கெடுத்தானே!

சஹஸ்ரா:—தாரையால் சந்திரன் கெட்டான். மூளியானான். மற்றும் இத்தகைய அநேக விருத்தாந்தங்களை பிறகு உரைக்கின்றேன். மிருகாவதியை நான் பத்தினியாய்க் கொள்ளும் விதந்தெரிந்துரைப்பாய். உருவிலனுமாரனும் சந்திரனுங்கூடி அவர்கள் கொழுப்பைக் காட்டுவார்களேல் என்பாடு திண்டாட்டமேதான்.

மிருகாவதி:—"இப்பொழுது காலைநேரம். சந்திரன் கொழுப்பு தெரியாது. இன்றிரவி லன்றோ, சந்திரன் கொழுப்பு தெரியப்போகிறது என, கமலாக்ஷி இப்பொழுது மாரனது கணை சுருக்கென்றதைக்குதே, தெரியவில்லையா" என்றாள்.

கமலாக்ஷி:—நானும் துன்பஞ்சகிக்க மாட்டாமல்தான் வருந்துகின்றேன். என்று மனஞ்சோர்ந்தனள்.

மிருகாவதி:-தோழியர்காள்! (சஹஸ்ராநீகனைச் சுட்டிக்காட்டி) இந்த என்னுடைய பிராணகாந்தர் மிகவும் உயர்ந்தமேனியர். சுமார் பதினெட்டு வயதிருக்கலாம். பார்ப்போர் குறிப்பிட்டு இவர் யாவர் என வினவும்படி அவ்வளவு கம்பீரமுள்ளவர். இவர் முகம் தங்கம் போன்ற நிறமுடையதாய் சரீராகிருதிக்குத்தக்க ரூபத்தையுடையதாயிருக்கிறது. நயனங்கள் மிகவும் சுறுசுறுப்புள்ளவைகளாய்த் தோன்றுகின்றன. நாசிகள் இவர் மகா புத்திமானெனப் பறைசாற்றுகின்றன. மேலுதடு மட்டும் அரும்புபோல் ஓடிய சன்னமான மீசையின் நிழலில் படிந்திருக்கிறது. தாடியே முளையாத முகவாய்க் கட்டை இவர் வயதைத் தெரிவிக்கின்றது. சரீரம் முழுதும் நிஜாரிலும் சட்டையிலும் ஆழ்ந்திருக்கின்றது. இவைகளுக்கு மேல், கழுத்தினின்று காலளவும் (இப்பொழுது நாம் "கவுன்" என்று சொல்லும்) சட்டையொன்று தொங்கிக்கொண்டிருக்கின்றது. இது கருநிறமுடையது; ஆனதினால் மோதிரமணிந்த கைகளின் நிறத்தையும் முகத்தின் சாயலையும் தூக்கிக்காண்பிக்கின்றது. பாதங்களிரண்டும் தங்கசரிகை போட்டுக் கட்டப்பட்ட பாதரட்சைகளில் ஒளிந்திருக்கின்ற தலையோ மிகவும் விலையுயர்ந்த "மஸ்லின்" தலைப்பாகையினால் கவரப்பட்டிருக்கிறது. நான்கு பக்கங்களிலேயும் சுண்டு விரலகலமுள்ள பொன் சரிகை போடப்பட்டும் மத்தியில் கட்டங்கட்டமாய் பொன்சரிகை கோடுகள் போடப்பட்டுமிருக்கிறது. இவ்வாறு அவருடைய தோற்றத்திலிருந்தே ஒரு சித்திரப்படமொன்று என்னுடைய மனதினு லமைத்துக்கொண்டு விட்டேன். அந்த மனோபாவனையைக் கொண்டே பிரத்தியக்ஷமான ஒரு சித்திரப்படத்தையும்,

இப்பொழுது அன்னவர் தன் தோழனுடன் வார்த்தையாடிக்கொண்டுலாவுந் தன்மையாய் நமது அரண்மனை சென்றவுடன் எழுதி, கண்ணாடிபோட்டு வைத்துக்கொண்டு என்கண்களைக் களிக்குமாறு செய்கின்றேன்” அடி கண்மணிகாள்! இவருடைய தோற்றமே இவருக்குறும் சௌசியாதி குணங்களை வெளிப்படுத்துகின்றதே!

கமலாக்ஷி:—ஏறக்குறைய எல்லா அம்சங்களிலேயும் எனது பிராணநாதருக்கும் அரசகுமாரனைப் போலவே நல்ல லக்ஷணம் அமைந்திருக்கின்றதென்றெண்ணுகின்றேன்.

மிருகாவதி:—கடவுள் கிருபையால் ஜனித்திருக்கும் மானிடர்களாதலால் நால்வரும் நம்மைப் போலவே எல்லாவிதத்திலும் ஒத்துதானிருப்பார்கள். ஐயமேன்!

வஸந்தன்:—அப்ப, மித்ர! மிருகாவதியைக் காணும லிருக்கையிலேயே வருந்தும் நீ அவளைக் கூடிப்பிரிய நேரிடுமானால் என்னைக் கொல்லாமல் கொல்லுவாய் போலும்.

மிருகாவதி:—கமலாட்சி: ஐயோடி! கூடியும் பிரிய நேரிடவேண்டுமோ! நன்றாயிருக்கிறதே, இவர் வார்த்தை, சபாஷ்!

சஹஸ்ராநீகன்:—தோழ! என்னுடைய கண்மணியாம் அவளை நான் கூடியும் பிரியவேண்டுமோ! கண்களிமை கொட்டும் நேரமும் பிரிந்திருக்கமுடியாதே! நானும் காதலியைப் பிரியவேண்டாம்; அதற்காக நீ வருந்தவும் வேண்டாம்.

மிருகாவதி:—நன்றாய்ச்சொன்னார், தகும், தகும்!

இந்தவிதமாய் சிறுவர்களிருவரும் வார்த்தையாடிக் கொண்டு அங்கிருந்து வேறு பக்கஞ்செல்லுங்கால், சிறுமிகள் நால்வரும் லதாகிரகத்தைவிட்டு மெள்ள வெளிப்போந் துலாவலாயினர். அப்பொழுது மாதலி இராஜகுமாரனுக்கெதிரில் ரதங்கொணர்ந்து நிறுத்தி “மகாராஜனே! தோழர்களான உங்களிருவரையும் கௌசாம்பியில் கொண்டு விடும்படி இந்த்ரன் கட்டளையிட்டவாறு தெரிவித்துக் கொள்ளலாயினேன். அன்றியும் அவர் விரும்பும்போதெல்லாம் நீங்கள் இவ்விடம் வந்து விநோதமாய்க் காலங்கழிக்கலாகுமென்றும் பணித்திருக்கின்றனர்” என்று பின்னும் “இராஜதநய! இதோ திரும்பிப்பாரும்; அதோ உலாவுகின்றவள் மிருகாவதி, அந்தமடமாதைத்தான் நீர் மணம்புரியக்கடவீர். நும் தோழர்கள் மூவரும் அந்த மற்ற மூன்று ரமணிமணிகளை மணம் புரிவார்கள். இந்த விசேஷ சமாச்சாரத்தையும் உம்மிடம் செப்புமாறு தேவேந்திர மகாராஜன் கட்டளையிடலாயினர்” என்றான்.

(இன்னும் வரும்).

துறையூர் மா. சுப்பராமய்யர்.

இரக்தாக்ஷி வருஷத்திய இரஞ்சித போதினியின்
திருக்கணித சர்வ முகூர்த்தப் பஞ்சாங்கம்.

கலியுகாதி 5026—சாலிவாகனம் 1847 —பசலி 1333---ஹிஜரி 1342
கொல்லமாண்டு 1099-1100, இங்கிலீஷ் **1924**ஹு

புரட்டாசி	செப்டம்பர் அக்டோபர்	வாரம்.	திதி.	நக்ஷத்திரம்	அமிர்தாதி யோகம்.	விசேஷங்கள்.
1	16	செவ்	திரி 16-13	அசு 49-8	சித் 60	பிருஹத்யுமவிரதம்
2	17	புத	சது 19-3	பர 54-13	சி 54-23 அ	மூலிகை உபயோகி
3	18	வியா	பஞ் 23-15	※கி 60-0	மர 60	சந்திரசஷ்டி
4	19	வெ	சஷ் 28-33	கிரு 0-28	சி 0-28 ம	பிரயாணம் விலக்க
5	20	சனி	சப் 34-35	ரோ 7-33	அ 7-33 சி	கதிர் அறுக்க
6	21	ஞா	அ 40-43	மிரு 15-3	சித் 60	ருத்ராஷ்டமி
7	22	திங்	நவ 46-18	திரு 22-15	சி 22-15 அ	கெஜகௌரிவிரதம்
8	23	செவ்	தச 50-5	புன 28-40	சித் 60	துலாயனம் 18-43
9	24	புத	ஏ 53-55	பூச 33-45	சித் 60	சர்வமத்வ ஏகாதசி
10	25	வியா	து 55-18	ஆயி 37-38	சி 37-38 அ	யதி மஹாளய
11	26	வெ	திர 54-55	மக 38-58	ம 38-58 சி	பிரதோஷம்
12	27	சனி	சது 52-48	பூர 38-58	சி 38-58 அ	மாசசிவராத்திரி
13	28	ஞா	● 49-20	உத் 37-23	அமி 60	சர்வபித்ருமாளயம்
14	29	திங்	பிர 44-18	அஸ் 34-33	சி 34-33 பி	நவராத்திரி ஆரம்ப
15	30	செவ்	துதி 38-40	சித் 30-50	சித் 60	சந்திர தரிசனம்
16	1	புத	திரி 32-23	சுவா 26-23	சித் 60	கரிநாள்
17	2	வியா	சது 25-45	விசா 21-48	சித் 60	மாசசதுர்த்திவிரத
18	3	வெ	பஞ் 19-18	அநு 17-13	சி 17-13 ம	லலிதாபஞ்சமி
19	4	சனி	சஷ் 13-10	கே 12-50	சித் 60	சூளைபோட
20	5	ஞா	சப் 7-35	மூல 9-8	அ 9-8 சி	துர்காஷ்டமி
21	6	திங்	அ 2-28	பூரா 5-58	மர 60	ஆயுதபூஜை
			நவ 58-18			
22	7	செவ்	தச 54-45	உத் 3-33	அ 33-3 சி	விஜயதசமி
23	8	புத	ஏ 52-0	திரு 1-50	சி 1-50 பிர	சர்வ மத்வ ஏகாதசி
24	9	வியா	து 50-5	அவி 0-55	சி 0-55 ம	கோ துவாதசி
25	10	வெ	திர 48-58	சத 0-23	சித் 60	பிரதோஷம்
26	11	சனி	சது 48-50	பூர 1-3	ம 1-3 சி	விருட்சம் வைக்க
27	12	ஞா	○ 49-33	உத் 3-5	அமி 60	பௌர்ணமி
28	18	திங்	பிர 52-28	ரே 5-45	சித் 60	ஆஸ்வீயபகுளம்
29	14	செவ்	து 54-43	அசு 9-28	சித் 60	கரிநாள்
30	15	புத	திரி 59-0	ப ※ 14-20	சி 14-20 அ	கிருத்திகை
31	16	வியா	சது 60-0	கிரு 20-18	மர 60	துலாரவி 17-25

இரஞ்சித போதினியின் இரக்தாக்ஷி வருஷத்திய
திருக்கணித சர்வ முகூர்த்தப் பஞ்சாங்கம்

கலியுகாதி 5026—சாலிவாகனம் 1847—பசலி 1333—ஹிஜரி 1342

கொல்லமாண்டு 1099-1100—இங்கிலீஷ் **1924**ஹு

ஐப்பசிமீ	அக்டோபர் நவம்பர்மீ	வாரம்.	திதி	நக்ஷத்திரம்	அமிர்தாதி யோகம்.	விசேஷங்கள்.
1	17	வெ	சது 4.20	ரோ 27.10	ம 27.10 சி	
2	18	சனி	பஞ் 11.20	மிரு 34.38	சித் 60	தானியம் செலவிட
3	19	ஞாயி	சஷ் 16.48	திரு 4[illegible].18	சித் 60	ஆயுத அப்பியாசம் செய்ய
4	20	திங்	சப் 23.0	புன 49.25	அ49.25சி	சமந்தம், கிரகப்பிரவேசம்
5	21	செ	அஷ்28.20	பூச 55.33	சித் 60	அசோகாஷ்டமி
6	22	புத	நவ 32.20	ஆயி 60.	சித் 60	கரிநாள்
7	23	வி	தச 34.28	ஆயி 0.10	சி 0.10 அ	விருச்சிகாயனம் 40.25
8	24	வெ	ஏ 34.30	மக 2.48	மா 2.48 சி	சர்வ, மத்வ ஏகாதசி
9	25	சனி	து 32.28	பூர 3.30	சி 3.30 ம	சனிபிரதோஷம்
10	26	ஞாயி	திர 28.28	உத் 2.[illegible]	அமி 60	இரவில் நரகசதுர்த்தசிஸ்நாநம்
				அஸ் 58.58		
11	27	திங்	ச ● 22.45	சித் 54.20	பி 54.20 அ	தீபாவளி, கேதாரகௌரி விர
12	28	செ	அம 15.55	சுவா48.43	சி 48.43 ம	பலிபிரதிபாத பலிபூஜா
13	29	புத	பிர 8.5	விசா42.30	சித் 60	சந்திர தரிசனம்
			துதி 59.58			
14	20	வி	திரி 51.48	அநு 33.40	சி33.40 பி	ஆலோசனகௌரி விரதம்
15	31	வெ	சது 44.3	கேட் 30.8	மா30.8 அ	நாகசதுர்த்தி
16	1	சனி	பஞ் 36.50	மூல 24.48	சித் 60	கதிரறுக்க, விதைவிதைக்க
17	2	ஞாயி	சஷ் 31.3	பூரா 20.25	சி20.25 அ	கந்தர்சஷ்டி, மஹாசஷ்டி
18	3	திங்	சப் 26.15	உத் 17.5	மா17.5 அ	பிரயாணம் விலக்க
19	4	செ	அஷ்22.43	திரு 15.5	சித் 60	கோவாஷ்டமி
20	5	புத	நவ 20.25	அவி 14.25	பி14.25 சி	கரிநாள்
21	6	வி	தச 19.28	சத 14.48	ம 14.58 சி	பிரயாணம் விலக்க
22	7	வெ	ஏகா 19.38	பூர 15.58	சித் 60	சர்வ மத்வ உத்தான ஏகாதசி
23	8	சனி	து 20.40	உத் 18.53	சி 18.53 ம	சனிபிரதோஷம்
24	9	ஞாயி	திர 22.45	ரே 22.13	அ22.13 சி	வைகுண்ட சதுர்தசி
25	10	திங்	ச ○ 25.45	அசு 26.45	சித் 60	பௌர்ணமி திரிபுர பூர்ணிமா
26	11	செ	பவு 29.38	பர* 31.53	சித் 60	மூலிகை உபயோகிக்க
27	12	புத	பிர 34.25	கிரு 38.0	அ38.0 சித்	கிருத்திகை
28	13	வி	துதி 40.3	ரோ 44.45	மா 60	கார்த்திக சாதுர்மாஸ்ய துதியா
29	14	வெ	திரி 46.20	மிரு 52.13	சித் 60	சிமந்தம், கிரகப்பிரவேசம்
30	15	சனி	சது 52.58	திரு 59.55	சித் 60	விருச்சிகரவி 16.18